1-12-'54

982

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



# கேட்டீர்களா!



## நேருவும் சீனக் குழந்தைகளும்

சமீபத்தில் நேரு சீனாவுக்குப் போயிருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது அவர் சீனக் குழந்தைகள் நிலையம் ஒன்றில் அங்குள்ள குழந்தைகளோடு அளவளாவும் காட்சி இது.

## மன்காட் - காப்டன்

டிசம்பர் மாதக் கடைசியில் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி ஒன்று பாகிஸ்தானில் சுற்றுப் பிரயாணம் செய்து 14 மாட்சுகள் ஆடப் போகிறது. இந்தியக் கட்சிக்கு வினு மன்காட் காப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பாகிஸ்தான் கட்சிக்குக் கர்தார் காப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பாகிஸ்தான் சுற்றுப் பிரயாணம் மார்ச்சு முதல் வாரம் வரையில் நீடிக்கும் என்று தெரிகிறது.

## குழந்தைகளுக்கான சினிமாப் படங்கள்

இந்திய சர்க்கார் குழந்தைகள் சினிமாப் படக் கழகம் ஒன்றை ஏற்படுத்த எண்ணியிருக்கிறார்கள். அந்தக் கழகம் குழந்தைகளுக்கான சினிமாப் படங்களை எடுக்க, இந்திய சர்க்கார் சகல உதவியும் செய்ய முடிவு செய்திருக்கிறார்கள். சாதாரணமாக இப்பொழுதுள்ள படங்கள் குழந்தைகள் விஷயத்தில் அக்கறை காட்டவில்லை என்றும் அதனால் அவர்களுக்கான விசேஷப் படங்களைச் சீக்கிரமே தயாரிக்கவேண்டும் என்றும் இந்திய சர்க்கார் கருதுகிறார்கள்.

## கண் தெரியாத கணக்கு மேதை

மதுரை மீனாக்ஷி மில்லில் ஒரு கணக்கு மேதை இருக்கிறார். அவர் பெயர் குருஸ்வாமி பிள்ளை. இவர் இரண்டு கண்ணும் தெரியாத அந்தகர். எந்தக் கணக்காக இருந்தாலும் இவர் மனக் கணக்காகவே செய்து விடை சொல்லிவிடுவார். ஆவடியில் நடக்கப் போகும் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில் இவர் திறமையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்போகிறார்களாம்.

## பரிசு பெற்ற சிறுவர்கள்

ஜாம்ஷெட்பூரில் ஐந்தாவது தமிழ் மகா நாட்டில் சித்திரக் கண்காட்சியில் பரிசுபெற்ற தமிழ்ச் சிறுவர்கள்:

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு:** | ஜி. ஆர். தாஸன் காரைக்கால் | - சூரியோதயம் |
| **2-ஆவது பரிசு:** | M. கல்யாணசுந்தரம், கும்பகோணம் | - பார்த்திபன் கனவில் ஒரு காட்சி |
| | ல. பெருமாள்சாமி, தேனீ. | - ஒரு மங்கை |
| | கே. கோபாலன், திருச்சி. | - ராமர் வனவாசம் |
| **3-ஆவது பரிசு:** | டி. வி. ரங்கநாதன், ஜாம்ஷெட்பூர். | - மான் |

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 23

1 - 12 - '54


| | | |
|---|---|---|
| குழந்தைகளே | பக்கம் | 2 |
| லீடர் மணி | .. | 3 |
| அருமையான சம்பவம் | .. | 6 |
| அன்னை சாரதாமணி | .. | 9 |
| பாலர் கவி அரங்கம் | .. | 12 |
| பாயும் புலி | .. | 13 |
| பொன் வயல் | .. | 19 |
| புதுப் பையன் | .. | 24 |
| கேளுங்கள், சொல்லுகிறேன் | .. | 29 |
| தூங்கும் அழகி | .. | 31 |
| சந்திரகிரிக் கோட்டை | .. | 33 |
| எங்கள் பகுதி | .. | 38 |

கேட்டீர்களா! - 2-ஆவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் -3-ஆவது அட்டை



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4.-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-


---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## ஒரே வழி!



மூட்டைப் பூச்சிக் கடி சகிக்க வில்லை என்று ஒவ்வொன்றாக நசுக்கினார் அவர். ஆனால் நசுக்கிய பிறகு நாற்றம் சகிக்க வில்லை! ஆனால்..

# குழந்தைகளே!

இந்த இதழில் அன்னை சாரதாமணி தேவியாரைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளியாகியிருக்கிறது. அன்னையின் நூறுவது வருஷப் பிறந்ததின விழாவை இந்த மாதம் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். குழந்தைகள் அன்னையின் வாழ்க்கை முழுவதும் படித்துப் பார்க்க வேண்டும் என்பதே என் அவா. சீதை, சாவித்திரி போன்ற ஸ்திரீ ரத்னங்களின் வரிசையில் அன்னை சாரதாமணி தேவியாருக்கும் இடமுண்டு. அவர்களுடைய வாழ்க்கையையும் வரலாற்றையும் படித்துத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். அடுத்த இதழிலும் அன்னையாரைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவரும்.

சென்ற இதழில் அறிவித்தபடி அடுத்த இதழோடு தூங்கும் அழகி முற்றுப்பெறுகிறது. புது வருஷத்திலிருந்து புதிய - புத்தம் புதிய - சித்திரத் தொடர்கதை ஒன்று ஆரம்பமாகிறது. புது வருஷத்திலிருந்து வெளிவரப்போகும் போட்டோ க்விஸ் உங்கள் அறிவு விளக்கத்துக்குப் பெரிதும் உதவும். இன்னும் குழந்தைகள் விரும்புகிற பல புதிய மாறுதல்களையும் கண்ணனில் காண்பீர்கள். ஒவ்வோர் இதழும் பொன்னேபோல் போற்றி வைக்கும்படி இருக்கும். இது நிச்சயம்.

அதனால் குழந்தைகள் கண்ணன் விட்டுப் போகாமல் கிடைப்பதற்காக, உடனே சந்தாதார்களாகச் சேரலாம். பழைய சந்தாதார்கள் தங்கள் சந்தாவை உடனே பணம் அனுப்பிப் புதுப்பித்துக்கொள்ளலாம். அவ்வப்போது இரண்டணாக் கொடுத்து வாங்குவதைவிட, கண்ணன் உங்கள் வீட்டைத் தேடி வருவது எவ்வளவோ நல்லதல்லவா?

சில இடங்களுக்குக் கண்ணன் பத்திரிகை உரிய காலத்தில் போய்ச் சேரவில்லை என்று தெரிகிறது. புது வருஷத்திலிருந்து அப்படி நேராதபடி உரிய காலத்துக்கு முன்னாலேயே கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்.

கண்ணன் சந்தாதாராக இருப்பதனால் என்ன பெரிய லாபம் என்று நீங்கள் கேட்கலாம். லாபம் நிச்சயமாக உண்டு. பத்திரிகை உங்கள் வீடு தேடி வருவது இருக்கட்டும். அதுவே ஒரு சௌகரியம்தான். ஆனால் நான் அதைச் சொல்லவில்லை. கண்ணன் காரியாலயத்திலிருந்து குழந்தைகளுக்குப் பயன்படும்படி அருமையான புத்தகங்கள் வெளியிட்டு வருகிறோம். இந்தப் புத்தகங்கள் வெறும் பொழுது போக்குக்காகப் படிக்கும் புத்தகங்கள் அல்ல. உற்சாகத்துடன் பொழுதும் போகும்; அத்துடன் உங்கள் இளம் உள்ளத்தில் பதியும்படி சிறந்த விஷயங்களையும் கூறும். உங்கள் அறிவு விரியும். சென்னை, பாட புத்தக சபையார் பள்ளிக்கூட வாசகசாலைகளுக்கும் அங்கீகரித்துள்ள வெளியீடுகள் இவை. தேன்போல இனிக்கும்; அதே சமயத்தில் டானிக்காக வளர்க்கும். இந்தப் புத்தகங்களை எல்லாரும் வாங்கக்கூடிய குறைந்த விலையில்தான் வெளியிட்டிருக்கிறோம். எட்டணா, பன்னிரண்டணாவுக்குமேல் விலையில்லை. ஆயினும் கண்ணன் சந்தாதார்களுக்கு இந்த விலையிலும் கமிஷன் உண்டு. அதாவது ரூபாய்க்கு 2 அணா விதம் சந்தாதார்களுக்குச் சலுகை உண்டு. சந்தாதார்களுக்கு ஒரு பரிசுத் திட்டம் ஏற்படுத்தலாம் என்றுகூட யோசனைதான். அதை எந்தச் சமயத்தில், எப்படிக் கொடுப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. இதையெல்லாம் யோசித்துப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

— ஆசிரியர்




சித்திக்கு எதனாலோ மணியிடம் கோபம் கோபமாக வந்தது. அந்தக் கோபம் அவளுடைய பேச்சிலே தெரிந்தது.

"எதுக்குப் போனாலும் ஏதாவது ஒரு தடை வந்து சேர்றது. சனீசுவரன் மாதிரி இந்தப் பிள்ளையாண்டான் வந்து நிற்கிறானே. இப்போ யார் இவனை அழைச்சது? ஏண்டா, உள்ளதைச் சொல்லு. உன் அப்பாதானே உன்னை உடனே புறப்பட்டு வரும்படி சொல்லியனுப்பிச்சார்? அதனாலேதானே வந்திருக்கே, மழுங்குணி மாங்கொட்டை மாதிரி?" என்றாள். அவள் குரலில் தொனித்த கோபத்துக்குக் காரணமே தெரியவில்லை.

மணி பதில் சொல்ல முடியாமல் விழித்தான். அப்பா சொல்லியனுப்பி அவன் வரவில்லை என்பது அவனுக்கு நிச்சயம் தெரியும். ஆனால் அவன் வந்ததில் அவன் அப்பாவுக்கு உண்மையில் சந்தோஷமா, வருத்தமா என்பது புரியவில்லை. இருட்டில் அவர் முகமும் அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை.

"சொல்லேண்டா, குறவா!" என்று சித்தி முடுக்கினாள்.

"இல்லே—"

"பின்னே நீயா எப்படி இந்தப் பிசாசு அலையற வேளையிலே வந்தே? அப்படி இங்கே என்ன கொள்ளை போகிறதுன்னு வந்து சேர்ந்திருக்கே!"

மணிக்கு அழுகை அழுகையாக வந்தது. அத்தையின் கொடுமையைக்கூடப் பொறுத்துக்கொள்ளலாம்போல இருந்தது. சித்தியின் இந்தச் சொற்கள் இன்னும் கடுமையாக இருந்தன. பாவம், அப்பாவுக்கருகில் போய் நின்றான். சித்தி பாய்கிற பாய்ச்சலில் முதுகில் இரண்டு விழுந்தாலும் விழுந்து விடலாம்.

சித்தியின் கோபம் திடீரென்று அவன் அப்பாவின் மீது திரும்பியது. "உங்களுடைய கெட்ட எண்ணமும், ஓர வஞ்சனையும் எனக்கு ஒண்ணும் தெரியாமல் போயிடல்லே. நீங்க சொல்லியனுப்பாட்டா, அந்தத் தடியன் இந்த இருட்டிலே வருவானா? பரமசாது மாதிரி முகத்தை வைத்துக் கொண்டால் நான் நம்பிவிடுவேனா?" என்று சொல்லிக் கொண்டு வரும்போதே அவளுக்கு



# எங்கள் பகுதி

வணக்கம். இந்த வருஷத்துத் தீபாவளி மலரைப் பற்றி வர்ணிக்க வேண்டுமானல் அது மாதிரி மலர் இதுவரை வரவேயில்லை என்றுதான் சொல்வேன். கண்ணன் மலர் இல்லாவிட்டால் தீபாவளி கொண்டாட்டமாகவே இருந்திருக்காது. தீபாவளியைப் பூரணமாக்கி விட்டது மலர். மலர் அவ்வளவு பிரமாதம்!

ஓவியர் 'தலா'வின் அட்டைப் படம் அழகான சிவப்புப் பட்டாடை போர்த்து வர்ணஜாலம் செய்கிறது! அப்பப்பா! அதில் தான் எத்தனை வர்ணங்கள்!

சோகம், ஹாஸ்யம், வீரம், திடுக்கிடும் சம்பவம் - இவை எதிலுமே சளைக்கவில்லை மலரிலுள்ள கதைகள். ஒவ்வொரு கதையைப் படித்து முடித்ததும் ஒவ்வொரு 'ஸ்வீட்' சாப்பிட்டது போலிருந்தது. அவ்வளவு ருசி!

புதுமையின் பொலிவிலே, பூத்துக் குலுங்கும் மகிழ்ச்சி மலரிலே சிறப்பின் சிகரமாக விளங்குகிறது 'பண்பாடு' என்ற கதை.

சிந்தைக்குத் தகுந்த விருந்து - கவிதைகள் யாவும்; இனிய கருத்துக்களை எளிய நடையிலே கூறின. பாடல்களின் கவிதை நயம் போற்றத் தக்கது!

'டாலி'யின் சித்திரங்கள் யாவும் சிறந்த ஹாஸ்ய சித்திரங்களாகத் திகழ்கின்றன. அவர் நல்ல புகழைச் சம்பாதித்து விட்டார்!

காத்திருந்த கண்களுக்கு நேர்த்தியான கண்ணைப் பறிக்கும் கலா ஒளிகளால் களிப்படைகிறேன்! உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது ஓவியர் ஸாமி, சுசி, சுப்புவின் ஒப்பற்ற ஓவியங்கள். புதுமலர்ப் பூங்காவிலே புகழுக்குரிய புகைப்படங்களால் பூரிப்படைகிறேன்! ராமகிருஷ்ணுவின் போட்டோக்கள் வழக்கம் போலவே நன்கு அமைந்திருக்கின்றன.

மலர் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை, படிக்கப் படிக்க உள்ளத்தில் உற்சாகத்தையும் மனத்தில் மகிழ்ச்சியையும் இதயத்தில் இன்பத்தையும் ஊட்டியது.

மொத்தத்தில் மலர் தன் பெயருக்கேற்ற மதிப்பைத் தவற விடாமல், இவ்வருட விசேஷத் தீபாவளி மலர் வரிசையில் முதலிடம் பெற்றுவிட்டது!

அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

''ஏண்டா, நான் சொல்லியா நீ வந்தே?'' என்ருர் அப்பா, மணியைப் பார்த்து.

''நாணுத்தான் அப்பா, வந்தேன் - அத்தை....'' என்று வேறு ஏதோ சொல்ல ஆரம்பித்த மணி வாயை மூடிக்கொண்டான்,

எல்லாரும் உள்ளே போனுர்கள். பாத்திரம் பண்டங்கள் எல்லாம் மூட்டை கட்டி வைக்கப்பட்டிருந்தன. பெட்டி பேழைகள் எல்லாம் எங்கேயோ புறப்படுவதற்குத் தயாராகக் காத்திருந்தன. மணிக்கு இதெல்லாம் என்ன என்று புரியவில்லை.

''வேலிக்கு ஓணுன் சாட்சி! அப்பாவுக்கு ஏற்ற பிள்ளை. பிள்ளைக்கு ஏற்ற் அப்பா! நான்தான் தனி. எனக்கு வேறு யார் நாதியிருக்கிருர்கள்?'' என்று சித்தி அழுகையும் ஆத்திரமுமாய்க் கூறிஞள்.

''இதோ பார்! நிசி வேளையில் இப்படி அழுது ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்யாதே. காசி, ராமேசுவரம் போனுலும் சரி; கங்கையிலேயே போய் விழுந்தாலும் சரி; நாளைக்கே புறப்பட்டு விடுவோம். வீண் பேச்சு எதற்கு? உன் பேச்சைக் கேட்டுத்தான் இருக்கிறதெல்லாம் விற்றுத் தொலைச்சுட்டேனே!'' என்று கோபித்துக்கொண்டார் மணியின் அப்பா.

மணிக்குப் பிறகுதான் விஷயம் புரிந்தது. சித்திக்குப் பிள்ளையில்லாக் குறை பெரும் குறையாக இருந்தது. காசி, ராமேசுவரம் போய்விட்டு வந்தால் பிள்ளை பிறக்கும் என்று எல்லாரும் சொல்லி வந்தார்கள். அப்படியாவது யாத்திரை செய்து விட்டு வருவோம் என்றுதான் அவள் கிளம்பிவிட்டாள். போவதற்குப் பணம் வேண்டுமே! சாப்பாட்டுக்கு என்று இருந்த கொஞ்ச நிலத்தில் பெரும் பகுதியையும் அப்பா அதற்காக விற்று விட்டார். சித்திக்கு விரோதமாகப் பேச அவருக்குச் சக்தியில்லை என்பது தான் தெரிந்த விஷயமாச்சே! கையிலிருந்த பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டால் பிற்காலத்துக்கு என்ன செய்வது என்றுதான் அவர் சண்டை போட்டார்.

''எல்லாரும் நிலத்தை வைத்துக்கொண்டுதான் சாப்பிடுகிருர்களோ? ஏதாவது ஒரு பண்ணையில் வேலை பார்த்துச் சம்பாதிப்பது, இல்லாவிட்டால் ஒரு வாத்தியார் வேலை செய்து சாப்பிடுவது; இதற்காக இந்த நல்ல காரியத்தைக் தடுப்பானேன்?'' என்று சித்தி சண்டை போட்டாள்.

கடைசியில் அவளுடைய பிடிவாதம்தான் வென்றது. அவனுடைய அப்பா தோற்றுப் போனுர். நிலத்தையும் விற்று விட்டார். திரும்பி வர ஆறு மாதம் போல ஆனுலும் ஆகும். அதுவரையில் மணி எங்கே இருப்பது, எப்படி இருப்பது என்பது பற்றிதான் அப்பா முதலில் கவலைப் பட்டார். சித்திக்கு அவன் ஒரு பெரிய தடையாக இருப்பதாகவே தோன்றியது. கடைசியில் அவனை அவன் அத்தையிடமே விட்டுச் செல்வதாக அப்பா முடிவு செய்திருந்தார்.

ஆனுல் மணி வந்திருக்கும் விஷயத்தைக் கேள்விப்பட்டால் இங்கே பூகம்பமே உண்டாகிவிடுமே. மணி அதனுல் வாயை இறுக மூடிக்கொண்டான். அத்தையிடம் திரும்பிப் போவதைவிட ஆற்ருேடு போய் விடலாம் என்றே அவனுக்குத் தோன்றியது. இந்தக் கஷ்டத்தை இனி யாரிடம் போய்ச்



சொல்லித் தீர்த்துக் கொள்வது? கடவுளிடம்தான் சொல்லி முறையிட வேண்டும் என்று அவன் முடிவு கட்டிக்கொண்டான்.

நிலம் போய் விட்டதே, இனி அவன் அப்பா இந்த வயசில் எங்கே போய் வேலை செய்வார்? எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவார்? எப்படித் தனக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவார்? எப்படித் துணி மணிகள் வாங்கித் தருவார்? இதற்கெல்லாம்கூட அவன் அவர்களிடம் போய் அநாதையாக நிற்க வேண்டுமா? முகத்தில் காரித் துப்புவது போல் பேசிய ராமுவின் வீட்டிலா போய், அவன் சோற்றுக்கும் துணிக்கும் பிச்சைக்காரன்போல நிற்க வேண்டும்?

மணிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. 'அம்மா இருந்தால் அப்பாவுக்கும் எனக்கும் இந்தக் கதி வருமா?' என்று எண்ணிய போது கண்களில் ஜலம் பொலபொலவென்று பெருகியது.

அவன் இருட்டான இடமாகப் போய் நின்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். இவ்வளவு வேதனையும் போதாதென்று அவனுக்குப் பசி வேதனையும் சேர்ந்துகொண்டது.

அவன் குழந்தைதானே? மேலும் ஐந்து மைலுக்குமேல் நடந்து வேறு வந்திருக்கிறானே? சித்தி அவனைச் சாப்பிட்டாயா, கொண்டாயா என்று மூச்சுகூட விடவில்லை. அவள்தான் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்து விட்டாளே!

இவன் கண்களைக் கசக்குவதை அவனுடைய அப்பா பார்த்து விட்டார். என்ன இருந்தாலும் பெற்ற பாசம் போகுமா? அதைச் சித்திக்கு எதிரே காட்டிக்கொள்ளவும் அவரால் முடியவில்லை. அவன் தோளைப் பிடித்து, ''வாடா இங்கே..போய்ப் படுத்துக் கொள், எல்லாம் காலையில் பார்த்துக்கலாம்'' என்று வாசல் பக்கமாய் இருட்டில் அழைத்துக் கொண்டு போனார். குரல் மட்டும் அதட்டுவதுபோல் இருந்ததே தவிர அவருடைய கை மெல்ல அவன் தோளைப் பிடித்து அன்போடு வருடிக் கொடுத்தது.

பிறகு மெதுவாக அவர் அவன் கையில் காகிதம் போல ஒன்றைத் திணித்து, ''மணி, பத்து ரூபாய் இருக்கு. இதைப் பத்திரமாய் வச்சுக்கோ. அப்புறம் நான் வந்து தர்றேன். சமர்த்தாக இரு. இந்த நோட்டை அந்தப் பிசாரியிடம் காட்டாதே!'' என்றார். இதைச் சொல்லும்போதே அவர் குரல் தழுதழுத்தது.

மணி அந்த நோட்டை மடித்து டிராயருக்குள் திணித்துக்கொண்டான். அப்பாவினுடைய மன வேதனையும் உள்ளன்பும் அவனுக்கு ஒருவாறு புலனாயின.

## அருமையான சம்பவம்

என் நண்பன் சுந்தரிடம் ஒரு விசித்திரமான குணம் இருந்தது. அவன் எப்போதாவது ஸ்கூலில் 'டெஸ்ட்', போட்டி என்றால் கையில் ஒரு கல்லை வைத்துக் கொண்டு, ''இதோ பாருங்கள். நான் அதோ அந்தக் கம்பத்தை அடித்துவிட்டால், நான் ஜயிப்பேன்'' என்பான். அதன்படியே அவன் கம்பத்தை அடிப்பது மட்டுமல்லாமல் 'டெஸ்டி'லும் முதலாவதாகத் தேறிவிடுவான். இந்த மாதிரிதான் ஒவ்வொரு விஷயத்திலும். எல்லாவற்றிலும் வெற்றி! தான் குறி தவறாமல் அடிப்பதால்தான் வெற்றி அடைவதாக அவன் நம்பினான்.

ஒரு நாள் பள்ளிக்குப் பக்கத்திலுள்ள மரத்திலே ஒரு குருவிக் கூட்டைக் காண்பித்து, ''ராஜ், இந்தக் கூடு சிதையாமலிருக்கும் வரை நான் உயிரோடிருப்பேன்'' என்றான். 'இதென்ன மூட நம்பிக்கை!' என்று நான் கேலியாகச் சிரித்தேன்.

ஆனால்.... ஒரு வாரத்திற்கு பிறகு நான் மரத்தினடியில் சென்று பார்த்தபொழுது, அந்தக் குருவிக் கூடு சின்னபின்னமாகப் பிய்ந்து கிடந்தது! நான் பயந்தேன். அதனால் நான் இதைச் சுந்தரிடம் சொல்லவில்லை. ஆனால் அன்று நான் ஸ்கூலில் சுந்தரைப் பார்த்த போது அவன் முகத்தில் களையே இல்லை. அவனும் அந்தக் குருவிக் கூட்டைப் பார்த்தானோ, என்னவோ! எதனாலோ அவன் யாரிடமும் சரியாகப் பேசவும் இல்லை!

''மறுநாள் சுந்தர் ஒரு லாரியின் அடியில் சிக்கி இறந்துவிட்டான்'' என்ற செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது. —இந்திரா, நாகப்பூர்.

அவன் சிறிது தைரியத்துடன், "அப்பா! நான் ராத்திரி ஒன்றும் சாப்பிடவே யில்லை. ரொம்பப் பசிக்கிறது" என்று சொன்னான்.

"சாப்பிடல்லியா? ஏன் சாப்பிட வில்லை? இங்கேயும் இந்தக் காளி ஒண்ணுமே பாக்கி வச்சிருக்க மாட்டாளே?" என்ற அப்பா என்ன செய்வதென்று புரியாமல் உள் பக்கம் பார்த்தார். உடனே அவருக்கு ஏதோ ஞாபகத் துக்கு வரவே, "இங்கேயே இரு; இதோ வர்றேன்" என்று உள்ளே போனார். சாயங்காலம் சுவாமி படத்துக்குப் பழம் வைத்து நிவேதனம் செய்தது அப்படியே இருந்தது. சுவாமியே கருணையோடு அதை மீதி வைத்திருந்ததுபோல எண்ணிக்கொண்டு, அதை அவரு டைய மனைவிக்குத் தெரியாமல் எடுத்துவந்தார். அந்தப் பழங்களை அந்தச் சித்தி படுக்கப் போகும் போது சாப்பிடுவது வழக்கம். இன்றுதான் அவள் இன்னும் படுக்கவே போகவில்லையே!

"இந்தா, இதைச் சாப்பிடு!" என்று சீப்போடு இருந்த நாலு பழங்களை அவன் கையில் கொடுத் தார்.

மணிக்கு அது அமுதத்தைச் சாப்பிடுவதுபோல் இருந்தது. அவள் நன்றி மிகுந்த உள்ளத் துடன் அதைச் சாப்பிடுவதை அவ னுடைய அப்பா பக்கத்தில் நின்று பார்த்துக்கொண் டிருந்தார்.

அந்தச் சமயத்தில் பின்னால் ஓர் உருவமும் வந்து நிற்பதை அப் பாவோ, பிள்ளையோ கவனிக்க வில்லை.

அவனுடைய சித்திதான் அங்கே வந்து நின்றாள். இருளில், வாச லில், அப்பாவும் பிள்ளையும் தனக்கு விரோதமாக ஏதாவது பேசுகிறார் களா என்று கவனிக்கவே அவள் வந்தாள். அவர் உள்ளே வந்த தும், பிறகு வாசலில் போனதும் அவள் சந்தேகத்தை அதிகப்படுத்தி விட்டன.

"போதுமாடா, பசி கொஞ்ச மாவது அடங்கித்தாடா?" என்றார்



## காந்தி மண்டப நிதி

**கண்ணன் மூலம்**

பணம் அனுப்பியிருப்பவர்கள்:

முன் வசூல் ரூ. 9-0-0

எஸ். சுந்தரம்,

சேலம் டவுன் ரூ. 1-0-0


அப்பா.

''போரும், அப்பா!''

பின்னுலிருந்து சித்தியின் கர்ண கடூரமான குரல் வந்தது.

''ஏன், எங்கிட்டே சொன்னு அவனுக்கு நான் வந்து அந்தப் பழத்தைக் கொடுக்கமாட்டேனு? இதை ரகசியமா, திருட்டுத்தன மாத்தான் எடுத்துக் கொடுக்க ணுமோ? இதிலேயே நான் என்ன இருந்தாலும் தனி தனிதான் என்று தெரியல்லியா? என்னைவிட அப்போ இவன் உங்களுக்கு உசத்தியாகத் தானே போய்விட்டான்?''

''ஏண்டி, அவன் குழந்தை; பசி என்றான். பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவனுக்கும் உனக்கும் ஏதாவது போட்டியா?'' என்றார் அப்பா.

''குழந்தை! அதனுல்தான் இவ்வளவு கபடமா அப்பாகிட்டே தனியாக வந்து ரகசியமாகக் கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறானுக்கும்!'' என்றாள் சித்தி.

வாயில் பாதிப் பழமும் கையில் பாதிப் பழமுமாக நின்ற மணிக்கு, அதற்குப் பிறகு சாப்பிடுவது போலவே இல்லை.

அன்று இரவு அத்துடன் ஒரு மாதிரியாகக கழிந்தது. பொழுது விடிந்தது. சித்தி மணியிடம் பேசவேயில்லை.

காலைச் சாப்பாட்டின்போது மணியின் அத்தை வீட்டுக்குப் போகாமலே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும் என்றாள் சித்தி. ''சே சே! ஊருக்குப் போகிறபோது சொல்லாமல் போவது சரியில்லை! நன்றாய் இராது'' என்று சொன்னார் அப்பா. சித்தியோ பிடிவாதமாக இருந்தாள். ஒன்பது மணிக்கெல்லாம் வாசலில் ஓர் ஒற்றை மாட்டு வண்டி வந்து நின்றது. பெரிய பாத்திரங்களையெல்லாம் ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டு, கையில் இரண்டு பெட்டிகளும் இரண்டு மூட்டைகளுமாக வண்டியில் வந்து ஏறிக்கொண்டாள் சித்தி.

''பயலே, முன்னுலே போய் ஏறிக்கோடா!'' என்றார் அப்பா!

மணி முன்னுல் உட்கார்ந்து கொண்டான். அப்பா வண்டியில் ஏறப் போனார். ''இதோ பாருங்கோ! உங்க பிள்ளையையாவது நடந்து வரச் சொல்லுங்கோ! அல்லது நீங்களாவது நடந்து வாருங்கோ! முட்டிக் கொள்ளப் போனுலும் மூனு பேராகக் கிளம்பப்படாது'' என்றாள் சித்தி.

''அப்பா! நீங்க ஏறிக்கோங்கோ. நான் நடந்தே வரேன்'' என்று சொல்லி வண்டியைவிட்டுக் குதித்து, முன்னுல் ஓட்டமாய் ஓடினான் மணி.

அப்பா ஏறிக்கொள்ள, வண்டி புறப்பட்டது. அதன் வேகத்துக்குச் சரியாக மணியினுல் நடக்க முடியவில்லை. காலை வெயிலில் அவன் இரைக்க இரைக்க நடந்து வருவதைக் கண்டு அப்பா வருத்தப்பட்டார். வண்டி சங்கரபுரத்தை அடைந்தது.

(தொடரும்)

# அன்னை சாரதாமணி தேவி

**ஆர். நடராஜன்**

அன்னை சாரதாமணி தேவியார் 1853-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி ஜயராம்பாடி என்ற வங்கக் கிராமம் ஒன்றில் ராமசந்திர முகர்ஜி என்ற வேதியரின் மகளாகப் பிறந்தார். இவர் தாயார் பெயர் சியாமசுந்தரி தேவி. குழந்தைப் பருவத்திலேயே இவரிடம் சாந்த குணம் மிளிர்ந்தது. அவருடைய ஐந்தாவது வயதிலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் அவருக்கும் திருமணம் நடந்தது. (1859-மே மாதம் விவாகம்) இவருடைய சிறுபிராயத்தில் நடந்த இரு சம்பவங்கள் இவை.

இரு குடும்பத்தினரும் ஏழைகளாதலால் மணக் கோலத்தில் பெண் ஆபரணமாகப் பூண வேண்டிய நகைகளை ஸ்ரீராமகிருஷ்ணரின் தாயார் சந்திராதேவி இரவல் வாங்கியிருந்தார். மணம் முடிந்தது. சில நாட்களில் பெண்ணை, வீட்டுக்கு அழைத்துவந்தார்கள். 'நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே, எப்படிப் பெண்ணைக் கேட்பது?' என்று சந்திராதேவி கவலைப்பட்டாள்.



தாயின் உள்ளத்தை அறிந்த ராம கிருஷ்ணரே, இரவில் பெண் உறங்கிக்கொண் டிருக்கையில், நகைகளைக் கழற்றிக் கொடுத்து விட்டார். சாரதாமணிதேவி காலை யில் எழுந்ததும் நகைகளைக் காணுமல் அழ ஆரம்பித்தாள். சந்திராதேவி அன்பு மொழி களால் ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்திவிட்டார்.

உண்மையைக் கண்டறியும் நோக்கத்தையே லட்சியமாகக் கொண்டவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அவருக்கேற்ற பதிவிரதையாகவே அவள் வாழ்ந்து வந்தாள். ஹிந்து தர்மப்படி தம் புருஷனையே தெய்வ மாகக் கருதிய அவர்மீது ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அளவு கடந்த அன்பு செலுத்தினர்.

ஒரு சமயம் சாரதாமணி தேவி தன் பிறந்த வீட்டுக்குச் சென்றி ருந்தாள். அக்கம் பக்கத்துப் பெண் களின் கூட்டம் ஒன்றில் சேர்ந்து கொண்டு தக்ஷிணேசுவரத்திற்குப் புறப்பட்டாள். அங்கிருந்து மறு நாள் காலையில் சூரிய கிரகணத் திற்குக் கங்கையில் ஸ்நானம் செய்ய அந்தக் கூட்டம் கிளம்பியது. இரண்டு நாட்களாகக் கால் நடையாகவே வெகு தூரம் வந்த படியால் வழியில் சாரதாமணி தேவி மிகவும் களைத்து விட்டாள். மற்றவர்களை முன்னே சென்றுகொண் டிருக்கும்படி கூறி ஞள். அவர்களும் தாரகேசுவரத் தில் போய்க் காத்திருப்பதாகச் சொல்லிப் போய்விட்டார்கள்.

அவர்கள் கடந்து சென்றது ஒரு பொட்டல் காடு. எங்கும் ஒரே வெட்ட வெளி. கொலை களவுக்குப் பேர் போன இடம். கள்வர்கள் வழிபட்ட காளி கோயில் ஒன்றை இன்றைக்கும் அங்கே காணலாம். பகலில்கூடத் தனியாகச் செல்ல யாரும் அஞ்சு வார்கள். கூடவே வந்த மங்கையர் களும் இவள் இவ்வளவு தூரம் பின் தங்கி விடுவாள் என்று எதிர் பார்க்கவில்லை. கதிரவன் தன் செங்கதிர்களைச் செலுத்தி மறைந் தான். படலம் படலமாய் இருள் திரை சூழ்ந்துவந்தது. ஒரே அமைதி.

மங்கிய ஒளியில் இருள்போன்ற ஒரு பருத்த உருவம் கையில் ஒரு கழியுடன் சாரதாமணியைநோக்கி வந்துகொண்டிருந்தது. சிறிது தூரத்தில் ஒரு மெல்லிய உருவம் ஒன்று அதைப் பின்தொடர்ந்து வந்தது. இந்த நிலையில் யாருடைய மனசு தான் தத்தளிக்காது? ஆனல் சிறிதும் கலங்கவில்லை.

"இந்த வேளையில் யார் அங்கே நிற்பது?" என்ற கடுங் குரல் அதட்டிக் கர்ஜித்தது.

"அப்பா! நான்தான் உங்கள் குழந்தை சாரதா. நாளை, கங்கை யில் நீராடப் போகிறேன்" என்ருள் அச்சமறியாத தேவி.

இதற்குள்ளாக அந்த மனித னது மனைவியும் அங்கே வந்து சேர்ந்தாள். "அம்மா! நல்ல வேளையில் அப்பாவும் நீயும் வந்தீர் கள். என்னுடன் வந்தவர்கள் தாரகேசுவரம் போய்விட்டார் கள். நான் களைத்துப் போய் நடக்க முடியாமல் தனியே என்ன செய்வது என்று ஏங்கிக்கொண் டிருந்தேன். நீங்கள் வராதிருந் தால் என் பாடு என்ன ஆகியிருக்கு மோ!" என்ருள் தேவியார்.




நீரையே கதி என்று நம்பியிருக்கிறது. அது போல் கல் நெஞ்சம் படைத்த கொலை பாதகனும் தன்னிடம் அடைக்கலம் புகுந்தவருக்கு உதவி புரிகிறான். அன்னையாரின் தெய்விக சக்தி அவனுடைய நல்ல இயல்பைத் தூண்டிவிட்டது. தேவியாருக்கு அன்று இரவு உண்ண உணவும் படுக்கப் பாயும் கொடுத்து, மறு நாள் காலையில் தாரகேசுவரத்திற்கே அழைத்துச் சென்றான். மற்ற மங்கையர்கள் இதைக் கண்டு ஆச்சரியப் பட்டார்கள். பிற்காலத்தில் இவர்கள் இருவரும் அன்னையைக் காண அடிக்கடி வருவார்கள்.

நம்பிக்கை ததும்பிய தேவியின் எளிய சொல் அந்தக் கொடூர மனிதனது மனத்தை அறவே கவர்ந்தது. அந்தத் தெய்விகக் குரல் அவன் நெஞ்சைத் தொட்டு விட்டது. அன்பாகிய மந்திரத்திற்குக் கட்டுண்ட பாம்பு போல், அவனைத் தன் சொந்த மகளாகக் கருதி ஆறுதல் சொல்லி, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். யானையையும் அடித்து உருட்டிக்கொண்டு போகக்கூடிய நீர்ப் பெருக்கில் சிறு மீன் எதிர் நீச்சு நீந்துகிறது. நீர்ப் பெருக்கு அதற்கு அன்போடு இடம் கொடுக்கிறது. ஏனென்றால் சிறு மீன்

## உபதேச மொழிகள்

வயதானால் சரீரத்தில் வலு குறைந்துவிடுகிறது. மனமும் வீரியத்தை இழந்துவிடுகிறது. அந்தச் சமயத்தில் எந்தக் காரியத்தையும் செய்வது சாத்தியமல்ல. தினந்தோறும் பகவானுடைய திருநாமத்தை உச்சரிக்க வேண்டும். இவ்வாறு செய்யாமல் என் எனக்கு வெற்றி கிட்டவில்லை என்று சொல்லிக் குறை மட்டும் கூறுகிறார்கள். பகவானுடைய நாமத்தை உச்சரிப்பது மனத்தை உறுதிப்படுத்துவதற்கேயாகும். இளமைப் பருவத்திலேயே பக்தியுடன் அப்பியாசம் செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்.



# பாலர் கவி அரங்கம்

## கவிமணியின் பாட்டு

சு. விசுவநாதன்

தேனைப் போலே பாட்டு—ஆனால்
தெவிட்டாத நற் பாட்டு
வானத் தமுதம் போலே—யாரும்
வாரிக் குடிக்கும் பாட்டு
சிறுவர் தினமும் பாடி—உள்ளம்
திளைக்கும் நல்ல பாட்டு
படிக்கப் பெரியோர் தமக்கு—மிகவும்
பக்தி ரஸப் பாட்டு
கந்தன் மீது பாட்டு—கமலக்
கண்ணன் மீது பாட்டு
இந்த உலகம் தன்னில்—வாழும்
எந்த உயிரின் மீதும்
கனியும் தமிழில் தந்த—எங்கள்
கவிமணி யின் பாட்டு
உள்ளப் பெட்டியில் வைத்தே—இந்த
உலக மிதில் வாழ்வோம்.

## பட்டணத்துத் திருவிழா

பழ. சிவன்ஜோதி

பட்டணத்துத் திருவிழா,
பார்க்க வாரும் தோழரே,
பட்டுச்சட்டை போட்டுக்கொண்டு,
காரில் ஏறிச்செல்லலாம்.
கோவிலுக்குப் போகலாம்,
கோபுரத்தைப் பார்க்கலாம்,
நாவினால் இறைவனை,
நல்ல துதி செய்யலாம்.
ஊரில் உள்ள மக்களை,
ஒன்று சேரச் செய்திடும்,
தேரைக் கண்டு மகிழலாம்,
ஊரை நோக்கித் திரும்பலாம்.




துப்பறியும் நிபுணர் ஜயராஜ் மியூஸியத்தின்முன் காரை நிறுத்தினர். மியூஸியத்தின் வெளியேயும் உள்ளேயும் ஒரே கூட்டமாக இருந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த சின்னத்தம்பியைப் பார்த்து, "கூட்டம் ஏகமாக இருக்கிறதே! இந்த மியூஸியத்தில் அவ்வளவு அதிசயமான பொருள் என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

"பாயும் புலி" என்ருன் சின்னத்தம்பி.

"பாயும் புலியா? என்ன அது?" என்று கேட்டார் ஜயராஜ்.

"ராம்சிங் என்று ஒரு சிற்பி இருக்கிருனும். அவன் ஒருவிதமான அரக்கினுல், மிகவும் கஷ்டப்பட்டு, பாயும் புலியைப்போல் பொம்மை ஒன்று செய்திருக்கிருனும். அந்தப் பொம்மை அசல் புலியைப்போல் இருக்கிறதாம். அது பயங்கரமாகக் கத்திக்கொண்டு, நம்மீது பாய்ந்து வருவதுபோல் இருக்கிறதாம். அதன் விலை இருபதாயிரம் ரூபாய் என்று மதிப்பிட்டிருக்கிருர்கள்!" என்ருன் சின்னத்தம்பி.

"உனக்கு எப்படி இவ்வளவு விஷயங்கள் தெரியும்?"

"காலையில் பத்திரிகையை நீங்கள் படிக்கவில்லை. வேலை மிகுதியால், அப்புறம் படிக்கலாம் என்று மேஜை டிராயரில் வைத்து விட்டீர்கள். ஆனுல் நான் பத்திரிகை வந்தவுடனே படித்து விட்டேன்."

"அந்தப் புலியை நாமும் அவசியம் பார்க்க வேண்டியதுதான்!" என்று சொல்லி, டிக்கட்டுகள் வாங்கி வரப் பணத்தைக் கொடுத்தனுப்பினர் ஜயராஜ்.

சின்னத்தம்பி, கூட்டத்தில் நுழைந்து டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டு வந்தான்.

ஜயராஜ் காரை விட்டு இறங்கினர். "இந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு எல்லாவற்றையும் பார்ப்பது கஷ்டம். பாயும் புலியை மட்டும் பார்த்து விட்டுப் போகலாம்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார்.

"பாயும் புலி பின் பக்கம் ஹாலில் இருக்கிறது. அந்த ஹாலின் கதவுகள் இன்னும் திறக்கப்படவில்லை. இன்னும் ஐந்து நிமிஷத்தில் திறந்து விடுவார்கள். கூட்டம் முழுவதுமே அதற்காகத்தான் காத்திருக்கிறது!" என்ருன் சின்னத்தம்பி.

இருவரும் கூட்டத்தில் நுழைந்து, மியூஸியத்தின் பின் பக்க ஹாலின் வாயிற்படியில் தயாராக நின்ருர்கள். சரியாகப் பத்து மணி அடித்தது.

கதவுகள் திறக்கப்பட்டன. கூட்டம் குபுக்கென்று உள்ளே பாய்ந்தது. ஜயராஜும் சின்னத்தம்பியும் உள்ளே நுழைந்து சென்ருர்கள்.

ஹாலின் மத்தியில், அழகான மேடை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அந்த மேடையின் வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் பின் பக்கத்திலும், மஞ்சள் நிறப் பட்டு ஸ்கிரீன்கள் கட்டப்பட்டிருந்தன. மேடையின் மேல் பாயும் புலி கம்பீரமாகப் பாய்வது போல் இருந்தது.

ஜயராஜ் புலியைக் கூர்ந்து கவனித்தார். அவருடைய கழுகுக் கண்களுக்கு, அந்தப் பாயும் புலி அப்படி ஒன்றும் அபாரமாகப் படவில்லை. அதைப் பார்க்கவா இவ்வளவு கூட்டம் என்று எண்ணி வியப்படைந்தார் அவர். அதே சமயம் புலிக்குப் பின்னல் இருந்த திரையை விலக்கிக்கொண்டு ஓர் ஆசாமி தோன்றினன். அவன் தலை காடு மாதிரி கோரமாக வளர்ந்திருந்தது. அவன் கோட்டும் கால் சட்டையும் அணிந்திருந்தான். அவன் சட்டென்று பாய்ந்து வந்து, பாயும புலிப் பொம்மையை எட்டி ஓர் உதை விட்டான்.

பாயும் புலி மேடைமீதிருந்து கீழே தடால் என்று விழுந்து உடைந்தது. உள்ளே புகுந்த ஜனங்கள் அப்படியே அசந்து நின்று விட்டார்கள். புலியைத் தள்ளி உடைத்தவன் 'கப்'பென்று கீழே குதித்து, இடுப்பில் செருகியிருந்த சுத்தியலை எடுத்தான். அந்தப் புலிப் பொம்மையைத் தூள் தூளாக நொறுக்கித் தள்ளி விட்டான்.

ஜயராஜ் முன்னே பாய்ந்து சென்று அவனுடைய கோட்டைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினர். அவன் சுத்தியலால் அவரை அடிக்கக் கையை ஓங்கினன். அவர் தம் இடது கையால், அவனுடைய கையை மடக்கிப் பிடித்து, சுத்தியலை வாங்கிக் கீழே போட்டார்.

இதற்குள் சின்னத்தம்பி ஓடி வந்து அவனைப் பிடித்துக்கொண்டான். மியூஸியத்தின் ஆட்கள் மூன்று பேர் அந்தப் பைத்தியக்காரனை அடிக்க ஓடி வந்தார்கள். ஜயராஜ் அவர்களிடம், "அவனை ஒன்றும் செய்ய வேண்டாம். விஷயத்தைச் சொல்லிப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து விடுங்கள். இன்ஸ்பெக்டர் சந்தானத்திடம் நான் பேசிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு, சின்னத்தம்பியுடன் வெளியே புறப்பட்டார்.

"அவனுக்கு என்ன, பைத்தியமாக இருக்குமோ?" என்று கேட்டான் சின்னத்தம்பி.

ஜயராஜ் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமலே காரை முடுக்கினார்.

மாலை ஆறு மணிக்கு, ஜயராஜ் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். இன்ஸ்பெக்டர் சந்தானம் அவரை வரவேற்று உட்கார வைத்தார்.

"பாயும் புலியை உடைத்தானே, அவன் விஷயம் என்ன ஆயிற்று?" என்று கேட்டார் ஜயராஜ்.

"அவன் பெயர் பால்ராஜ். அவனும் ஒரு சிற்பிதானும். பைத்தியக்காரப் பேர்வழி" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஜயராஜ் மெல்லச் சிரித்தார். "புலிப் பொம்மையை எதற்காக உடைத்தானும்?" என்று கேட்டார்.

"ராம்சிங் செய்த பாயும் புலி பிரமாதமாக இருக்கிறது என்று ஜனங்கள் பேசிக்கொண்டதைக் கேட்டு அவன் ஆத்திரமடைந்து விட்டான். சாதாரணமான ஒரு பொம்மையை ஜனங்கள் கண் மூடித்தனமாகப் புகழ்கிறார்களே என்று துடித்தான். அந்தக் கோபத்தில் அதை உடைத்து விட்டதாகச் சொல்கிறான்."

"இப்போது அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?"

"நூறு ரூபாய் அபராதம் கிடைக்கும். அதுவே அதிகம்!"

"அவன் அந்தப் பொம்மையைத் திருடியிருந்தால்?"

"அப்போது விஷயம் வேறு, திருடியிருந்தால், கண்டிப்பாகச் சிறைவாசம் கிடைக்கும்!"

"சரி, நான் வருகிறேன். இந்தக் கேஸின் முடிவு நீங்கள் நினைப்பது



போல் இருக்கப் போவதில்லை'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் ஜயராஜ்.

இன்ஸ்பெக்டர் சந்தானம் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

நன்றாக இருட்டி விட்டது. அந்தத் தெருக் கோடியில், கார்ப்பொரேஷன் விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்து, அழகான படங்களை விற்றுக்கொண்டிருந்தான் ஒரு கிழவன். அவன் விற்றுக்கொண்டிருந்த படங்கள் அவ்வளவும் கையால் எழுதப்பட்டவை. இயற்கைக் காட்சிகளைப் பலவித கோணங்களில் சித்திரித்திருந்தான் அவன்.

ஜயராஜ், கால் சட்டைப் பைக்குள் கைகளை விட்டுக் கொண்டு, மெல்ல நடந்து சென்று அந்தப் படங்களைப் பார்த்தார்.

"என்ன, தாத்தா! இந்தப் படங்கள் அவ்வளவும் நீயே வரைந்தவைகளா?'' என்று கேட்டார்.

"ஆமாம். சின்ன வயதிலிருந்து இந்தச் சித்திரக் கலைதான் என்னை வளர்த்து வருகிறது'' என்றான் கிழவன்.

"பக்கத்தில் ஒரு சினிமாக் கொட்டகை இருக்கிறது. சினிமா விட்டதும் ஜனங்கள் இந்தப் பக்கம்தானே போகிறார்கள். அப்போதுதானே எனக்குக் கிராக்கி அதிகம்! இரண்டாவது ஆட்டம் முடியும் வரையில் இங்கேயே இருப்பேன். கடையைக் கட்டிக்கொண்டு புறப்பட ஒரு மணியாகிவிடும். ஆனால் நேற்று ஒரு புண்ணியவான் பதினொரு மணிக்கு வந்து, எல்லாப் படங்களையும் வாங்கிக்கொண்டு போய்விட்டார். நானும் சீக்கிரமே போய் விட்டேன்!''

ஜயராஜ் கிழவனிடம் பத்து ரூபாய் நோட்டை நீட்டினார். "இந்தப் படம் ஒன்றும் வேண்டாம். ஓர் உண்மை தெரிய வேண்டும். உன்னிடம் எல்லாப் படங்களையும் வாங்கிய அந்த ஆசாமி யார், தெரியுமா?'' என்று கேட்டார்.

கிழவன் ஒரு கணம் திகைத்துப் போனான். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவனாய், நோட்டை வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். "அவர் யாரென்று தெரியாது. பணத்தை வாங்கிக் கொண்டு, சினிமாத் தியேட்டருக்கு அப்பால் இருக்கும் ஹோட்டலுக்குச் சென்று, சப்பாத்தியும் பாலும் சாப்பிட்டு விட்டுத் திரும்பினேன். அப்போது இங்கே ஒரு வான் நின்றிருந்தது. அந்த வானில், என்னிடம் படங்களை வாங்கிய மனிதர் உட்கார்ந்திருந்தார். அவர் ஏன் அங்கே காத்திருக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் நான் போய்விட்டேன்.''

"சரி, நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஜயராஜ் காரை நோக்கி நடந்தார்.

மறு நாள் காலை இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் மேஜை மீதிருந்த டெலிபோன் கிணுகிணுத்தது. சந்தானம் ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

ஜயராஜின் குரல்தான் முதலில் பேசியது. "ஹலோ மிஸ்டர் சந்தானம்! உடனே நீங்கள் இரண்டு போலீஸ்காரர்



களுடன் காளத்திப் பிள்ளைத் தெருவுக்கு வரவேண்டும். நம்பர் நாற்பது!'' என்றார்.

"காளத்திப் பிள்ளைத் தெருவில் நம்பர் நாற்பதா?''

"ஆமாம். உடனே வாருங்கள். விஷயத்தைச் சொல்கிறேன்.''

"அது பால்ராஜின் விலாசம் ஆயிற்றே. அங்கே போய் என்ன செய்வது? பால்ராஜ் இன்னும் இங்கேதான் இருக்கிறான். இன்று ஜாமீனில் விடுதலை செய்யப் போகிறோம்!''

"அதெல்லாம் அப்புறம் இருக்கட்டும். உடனே புறப்பட்டு வாருங்கள். விஷயம் தன்னால் புரிந்துவிடும்'' என்று சொல்லிவிட்டு, டெலிபோன் ரிஸீவரை வைத்துவிட்டார் ஜயராஜ்.

அரை மணி நேரம் கழித்து, போலீஸ் ஜீப் பால்ராஜின் வீட்டிற்கு முன் நின்றது.

சந்தானம் இறங்கியதும், "இப்படி வாருங்கள்'' என்றார் ஜயராஜ். அவருடன் நடந்தார் சந்தானம்.

அந்த வீடு சிறியதாக இருந்தாலும் அழகாக இருந்தது. சுற்றிலும் அழகான தோட்டம். பின்னால் காரேஜ் கட்டப்பட்டிருந்தது. காரேஜின் முன் நின்றார் ஜயராஜ். அவருடன் சென்ற இன்ஸ்பெக்டர், "என்ன மிஸ்டர் ஜயராஜ், விஷயம் என்ன?'' என்றார்.

ஜயராஜ், காரேஜின் முன் சிறிது தூரம் வரையில் கட்டப்பட்டிருந்த சிமெண்டுத் தரையைக் காண்பித்தார். அது கொஞ்சம் ஈரமாக இருந்தது. "இந்தத் தரையைப் பெயர்க்கச் சொல்லுங்கள். இதனுள் பாயும் புலி இருக்கிறது'' என்றார் அவர்.

இன்ஸ்பெக்டர் 'ஷாக்' அடித்தவரைப்போல் ஜயராஜைப் பார்த்தார். மறு விநாடி போலீஸ் ஜவான்களைக் கூப்பிட்டார்.

அவர்கள் தோட்டத்தில் கிடந்த மண் வெட்டிகளை எடுத்து, சிமெண்டுத் தரையைப் பெயர்த்தார்கள். உள்ளே ஒரு மரப் பெட்டி தெரிந்தது. அதை வெளியே எடுத்துத் திறந்தார்கள். அதனுள்—

பாயும் புலி பயங்கரமாக வாயைப் பிளந்துகொண்டு நின்றிருந்தது! அந்தப் பாயும் புலியை, நிஜப் புலி பார்த்தால்கூடப் பயந்து ஓடிவிடும்! அவ்வளவு அழகாக—ஆனால் பயங்கரமாகக் காட்சியளித்தது அது!

ஜயராஜ் இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்: "பால்ராஜ் என்பவன் சிற்ப வேலையில் கெட்டிக்காரன் தான். ஆனாலும் ராம் சிங்கைப் போன்ற நிபுணன் அல்ல. ராம் சிங் செய்த இந்தப் புலி அபூர்வமானது. மகாராஜாக்கள் பார்த்தால் ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்து வாங்கிவிடுவார்கள். ஆகையால்தான் அந்தப் புலியைத் திருடிக்கொண்டு, வேறு ஒரு புலியை வைத்து விட்டான் பால்ராஜ். ஆனால் உண்மை வெளியாகாதபடி, மறு நாள் காலை மியூஸியம் திறந்ததும், பொறாமையின் காரணமாகப் புலியை உடைத்து விட்டது போல் நடித்திருக்கிறான். உடைக்கப்பட்ட புலி, நிஜப் புலிமாதிரி இவ்வளவு அழகாக இல்லை. உடைபட்ட பொருளைக்கொண்டு ராம் சிங்கின் பொம்மை அல்ல என்று கண்டு பிடிப்பது கஷ்டம். அதனால்தான் அதைத் தூள் தூளாகச் செய்து விட்டான்!"

"மியூஸியத்திற்குள் எப்படிப் புகுந்தான்?"

"மியூஸியத்தின் பின் பக்கம் ஒரு கதவு இருக்கிறது. அது எப்போதும் வெளிப் பக்கம் பூட்டியிருக்கும். அதைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்திருக்கிறான். அந்தத் தெருவில் படம் விற்கும் கிழவன் ஒருவன் இரவில் வெகு நேரம் இருப்பது வழக்கம். அவனையும் சாமர்த்தியமாகப் படங்களை வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டான். ஆனாலும் அந்தக் கிழவன், பால்ராஜ் பச்சை நிற வானில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டான்! அந்த வானில்தான் வேறு புலிப் பொம்மையைக் கொண்டுவந்து, மியூஸியத்தில் வைத்துவிட்டு, ராம் சிங்கின் பொம்மையைக் கொண்டு போயிருக்கிறான். அந்தப் பச்சை நிற வான் இந்தக் காரேஜில் இருக்கிறது!"

"திருடியவன் வேறு பொம்மையை ஏன் வைத்துவிட்டு உடைக்க வேண்டும்?"

"திருடியது தெரியாமல் இருக்க! இரண்டாவதாக, புலியைப் பொறாமையின் காரணமாக உடைத்ததாக நிரூபித்துவிட்டால் அபராதம்தான் கிடைக்கும். அப்புறம், ராம் சிங்கின் புலியை நல்ல விலைக்குத் தள்ளிவிடலாம் அல்லவா?"

"இது ரொம்பவும் சிக்கலான கேஸாகிவிட்டது!" என்றார் இன்ஸ்பெக்டர். அதைத் தொடர்ந்து, "பால்ராஜுக்குக் குறைந்தது ஐந்து வருஷம் தண்டனை கிடைக்கும்!" என்றார்.



# பொன் வயல்

ஹரிசரண்

"டிக்ஷனரி இல்லாமல் நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குள் வரக்கூடாதென்று வாத்தியார் சொல்லிவிட்டார், அப்பா!"

"இதோ பார்! ஒரு மாதமாக நான் உடம்பு சரியில்லாமல் படுத்துவிட்டேன். கையில் காலணா என்றால் காலணா கிடையாது. மேல் துண்டு வாங்குவதற்காக வைத்திருந்த பணத்துக்கு நேற்று சரித்திரப் புத்தகம் வாங்கிக் கொடுத்துவிட்டேன். இனி என்னால் ஒன்றும் முடியாது" என்றார் தகப்பனார்.

"அப்படியானால் நான் பள்ளிக்கூடமே போக வேண்டாமா?"

"நிலைமையை வாத்தியாரிடம் சொல்லிக் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளும்படி சொல்லேன்."

"சொல்லியாயிற்று. கேட்க மாட்டேன் என்கிறார்."

கிச்சுவின் தகப்பனார் சிறிது நேரம் யோசித்தார். "சரி! முன்பு ஒரு தரம் உன்னை மாம்பலத்தில் ராமசாமி என்பவரின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேன் அல்லவா? அவரிடம் போ. இருக்கிற நிலைமையைச் சொல். நான் கேட்டதாக ஒரு பத்து ரூபாய் கடன் கேள். கொடுத்தால் இரண்டு ரூபாய்க்கு டிக்ஷனரி வாங்கிக்கொண்டு பாக்கியை என்னிடம் கொண்டுவந்து கொடு" என்றார்.

கிச்சு உடனே மாம்பலம் சென்றான். ராமசாமியைக் கண்டான். விஷயத்தைச் சொன்னான்.

"அடடே! பட்டுசாமியா அனுப்பினான்? அவன் எப்பொழுதுமே கேட்டதில்லை. இந்தா!" என்று சொல்லிப் பத்து ரூபாயைக் கொடுத்தனுப்பினார்.

கிச்சுவுக்குச் சந்தோஷம் தாளவே இல்லை. இரண்டு ரூபாயில் டிக்ஷனரி போக அப்பாவுக்கு ஒரு டவல், எனக்கு ஒரு சட்டை என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டே, தெருவில் கன குஷியாகப் போய்க்கொண்டிருந்தான்.

அப்பொழுது 'உம்' என்ற பெருமூச்சைக் கேட்டுத் திரும்பினான் கிச்சு. இரண்டு சிறுவர்கள் அவன் பின்னால் வந்தார்கள்.

"எதற்காகப் பெருமூச்சு விட்டீர்கள்?" என்றான் கிச்சு.

"உன்னைப்பற்றி என் நண்பன் ரங்கு ஏதோ சொன்னான். அதற்காகத்தான் பெருமூச்சு விட்டேன்" என்றான் ராமு.

"பெருமூச்சு விடுவானேன்?" என்று கேட்டான் கிச்சு.

"பின்னே என்ன? சொன்னால் அவ்வளவு சுலபத்தில் கேட்டுவிடப்போகிறாயா?"

"கேட்காமல் என்ன?"

"உனக்கு ஓர் அதிர்ஷ்டம்!"

"அதிர்ஷ்டமா?"

"ஆமாம்."

"அதெப்படித் தெரியும்?"

"எப்படித் தெரிந்தாலென்ன? இப்பொழுது உன் மடியிலிருக்கும் பத்து ரூபாய் நோட்டு இருபது ரூபாயாக ஆனல், உனக்கு அதிர்ஷ்டமா இல்லையா?"

"பத்து ரூபாய், இருபது ரூபாய் ஆகிறதா?"

"ஆமாம். இரட்டிப்பாகும்."

"ஓகோ! நோட்டை இரட்டிப் பாக்குகிற கதையா? சரிதான், சரிதான்!" என்று லேசாகச் சிரித்தான் கிச்சு.

"பார்த்தாயா? இதற்குத்தான் நான் பெருமூச்சு விட்டேன். தெரியும் எனக்கு. 'எதையோ நம்பி மோசம் போய், அதனல் நியாயமானதைக்கூட நம்ப மாட்டார்கள்' என்ருன் ரங்கு. அது சரியாகப் போய்விட்டது" என்ருன் ராமு.

"உனக்கு என் வீண் தொல்லை? அவன் கொடுத்து வைக்கவில்லை" என்ருன் ரங்கு அதற்குள்.

"பாவம், அநியாயமாய் வலிய வரும் அதிர்ஷ்டத்தை உதறித் தள்ளுகிருனே என்று வருத்தமாக இருக்கிறது. ஒரு பத்து ரூபாயைக் கொண்டு, இருபது, நூறு, ஆயிரம் ஆகா, எவ்வளவு ரூபாய் குவிக்கலாம்!" என்ருன் ராமு.

"உண்மைதான், யார் இல்லை என்று சொல்கிருர்கள்? இது அவனுக்குத் தெரிந்தால் பரவாயில்லை. தெரியவில்லையே" என்ருன் ரங்கு.

"தம்பி! வலிய வரும் அதிர்ஷ்டத்தை உதைத்துத் தள்ளாதே" என்ருன் ராமு.

"அதிர்ஷ்டமாவது அற்ப சொற்பமானதா? ஒரு பத்து ரூபாய்க்கு இரண்டாயிரம் ரூபாய்!" என்ருன் ரங்கு.

"இரண்டாயிரமா?"

"அப்படிக் கேள், தம்பி, அப்படிக் கேள்! 'பொன் வயல்' என்று கேள்விப்பட்டிருக்கிருயல்லவா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே மரம், செடிகளெல்லாம் பொன்னுகவே காய்த்துக் குலுங்குமாமே! கதைதானே?"

"கதையா? யார் சொன்னது?"

"அங்கு நம்மாலெல்லாம் போக முடியாதாமே!"

"எல்லாராலும் போக முடியாது. ஆனல் எங்களால் முடியும்."

"நிஜமாகவா?"

"பொய் எதற்குச் சொல்கிருேம்? இதோ அங்கிருந்துதான் நேராக வருகிருேம்."

உடனே கிச்சு அவ்விருவரையும் உற்று நோக்கினன். அவர்கள் கிழிந்த சட்டையும் பரட்டைத் தலையுமாக இருக்கக் காணப்பட்டனர்.

"என்ன பார்க்கிருய்? தெரியும், தெரியும்! அப்படிப்பட்ட இடத்திலிருந்து வருகிறவர்கள் ஏன் இப்படி ஏழைபோல் இருக்கிருர்கள் என்று யோசிக்கிருய்? அதுதானே?" என்ருன் ராமு.

"ஆமாம்."

"தெரியுமே எனக்கு. யாருக்கும் இந்தச் சந்தேகம் ஏற்படுவது இயற்கைதான். உனக்கு என் அந்தச் சந்தேகம்? அதையும் போக்கிவிடுகிறேன். கேள்" என்ருன் ராமு. அதற்குள், "என்ன ராமு! எதற்காக அவனுக்கு நம்முடைய கதைகளையெல்லாம்



சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்? இஷ்டமிருந்தால் அதிர்ஷ்டத்தை அடையட்டும். இல்லாவிட்டால் போகட்டுமே. அவனுக்குத்தானே அந்த கஷ்டம்! பேசாமல் போகலாம் வா" என்று ராமுவின் கையைப் பிடித்து இழுத்தான் ரங்கு.

"பார்த்தீர்களா? கோபித்துக் கொள்கிறீர்களே! இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும்?" என்றான் கிச்சு.

"இப்பொழுது கேட்டாயே, இது சரியான கேள்வி. அந்தப் பொன் வயல் என்பது வெகு சமீபத்தில்தான் இருக்கிறது. பகலில் அங்கே செல்ல முடியாது. இரவில்தான் போகலாம். அது ஒரு பெரிய மைதானம். ராத்திரி சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அங்கே செல்லவேண்டும். மைதானத்தின் நடுவில் சிறியதாக ஒரு பள்ளம் தோண்டவேண்டும். அதில் இந்தப் பத்து ரூபாய் நோட்டை வைத்து மூடிவிட வேண்டும். பிறகு நாங்கள் ஒரு மந்திரம் சொல்லுவோம். அதை நீ சொல்லவேண்டும். அப்புறம் சிறிது தூரத்திலுள்ள பாதையோரத்தில் படுத்துத் தூங்கிவிட வேண்டும். விடியற்காலையில் சென்று பார்த்தால் அங்கே என்ன இருக்கும் என்று நினைக்கிறாய்?" என்றான் ராமு.

"என்ன இருக்கும்?" என்றான் கிச்சு ஆவலோடு.

"நாம் நோட்டைப் புதைத்திருந்தோமே, அந்த இடத்தில் ஒரு பெரிய செடி தோன்றியிருக்கும். அதன் கிளைகளெல்லாம் பொன்னாக இருக்கும். இலைகளெல்லாம் பத்து ரூபாய் நோட்டுகளாக இருக்கும். பூக்களெல்லாம் வைரக் கற்களாக இருக்கும்" என்றான் ராமு.

"நீங்கள் இரவு அங்கே தங்க வேண்டும் என்கிறீர்களே. என் தகப்பனாரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்" என்றான் கிச்சு.

"நான் சொல்வதைக் கேள். அவனுக்கு அதிர்ஷ்டமில்லை. போகலாம், வா" என்றான் ராமுவை நோக்கி ரங்கு.

"கிச்சு! உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. உன்னைப் பார்த்தவுடனே எனக்கு 'ஐயோ பாவம்' என்று தோன்றியது. அதனால் சொன்னேன். வீட்டுக்கெல்லாம் போய் வரக்கூடாது. நேராக வருவதானால் வா. இல்லாவிட்டால் உன்னைத் தேடி வந்த



டிரைவர்: பின்னாலே படுக்கை போடற இடந்தான் இருக்கு! தேவலாங்களா?

அதிர்ஷ்டம் போய்விட்டது என்று எண்ணிக்கொள்'' என்றான் ராமு.

கிச்சுவுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. சிறிது நேரம் யோசித்து விட்டு, "சரி! பொன் வயலுக்கே போகலாம் வாருங்கள். பெற்றோர்களின் மனம் சிறிது நேரம் அலைந்தாலும் பிறகு பெரிய சந்தோஷம் ஏற்படுமல்லவா? ஆகவே போகலாம் வாருங்கள்'' என்றான்.

இரவு எட்டு மணி இருக்கும். ரோடு ஓரத்திலிருந்த ஒரு சிறிய ஓட்டலுக்குள் மூவரும் வந்து சேர்ந்தார்கள். நன்றாகச் சாப்பிட்டார்கள்.

"மணி எட்டரையாகிறது. பதினொன்றரை மணிக்குத்தான் பொன் வயலுக்குப் புறப்பட வேண்டும். ஆகவே மூன்று மணி நேரம் இந்த அறையிலேயே தூங்கலாம்'' என்றான் ராமு.

மூன்று பேரும் படுத்துக் கொண்டார்கள். வந்த அலுப்பில் கிச்சு நன்றாகத் தூங்கிவிட்டான்.

பதினொன்றரை மணிக்குத் தன்னை யாரோ எழுப்பவே எழுந்து உட்கார்ந்தான் கிச்சு. எதிரே ஓட்டல்காரர் நின்று கொண்டிருந்தார். பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த ராமுவையும் ரங்குவையும் காணோம். "எங்கே அவர்கள்?'' என்று அவரைக் கேட்டான் கிச்சு.

"அவர்களை யாரோ வந்து கூப்பிட்டார்கள்; அவசரமாகப் போய்விட்டார்கள். உன்னை இந்த ரோட்டிலேயே தெற்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கச் சொன்னார்கள். வழியில் அவர்கள் சந்தித்துக் கொள்வதாகச் சொன்னார்கள்'' என்றார் ஓட்டல்காரர்.

உடனே கிச்சு தெற்கு நோக்கிச் சென்றான். எங்கும் ஒரே இருட்டு. இருந்தாலும் வரப்போகிற அதிர்ஷ்டத்தை நினைக்கையில் அவன் பயமெல்லாம் எங்கோ போய்விட்டது. பாதையின் இரு புறமும் அடர்ந்த புதர்.

திடீரென்று, "யாரது?'' என்ற குரல் கேட்டது.

கிச்சு நின்றான். கறுத்த இரு உருவங்கள் புதருக்குள்ளிருந்து அவனை நோக்கி வந்தன. கிச்சு நடு நடுங்கிவிட்டான்.

"எங்கே போகிறாய்?''

"பொன் வயலுக்கு.''

"ஓகோ! பொன் செடி பெறுவதற்கா? கையில் எவ்வளவு வைத்துக் கொண்டிருக்கிறாய்?''

"ஒன்றுமில்லை.''

"ஒன்றுமில்லாமலா பொன் வயலுக்குப் போகிறாய்? பொய் சொல்லுகிறாய்.''

"நிஜமாகத்தான். பத்து ரூபாய் வைத்துக்கொண்டிருந்தேன். அதை அந்த ஓட்டல்காரர் வாங்கிக்கொண்டு விட்டார்.''

"என்னது, ஓட்டல்காரரா?''

"ஆமாம்."

"பொய் சொல்லுகிருய்."

"நிஜந்தான் சொல்கிறேன்."

"அவரைக் கேட்கலாமா?"

"உம்."

கிச்சு துணிந்துதான் பொய் சொன்னுன். ஒட்டல் வரையில் அவர்கள் வந்தால் பிடித்துக் கொடுத்து விடலாமே!

ஆனல் அவர்கள் அவனைச் சோதனை போடத் தொடங்கினுர்கள்.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு கார் வெகு வேகமாய் வந்து நின்றது. காரைப்பார்த்தவுடனே திருடர்கள் ஓட ஆரம்பித்தார்கள். கிச்சுவுக்குத் தைரியம் வந்து விட்டது. அவ்விருவரில் ஒருவனைப் பிடித்துக்கொண்டு விட்டான். விளக்கு வெளிச்சத்தில் பார்த்தால், வேறு யாருமில்லை. பொன் வயலுக்கு அழைத்துப் போவதாகச் சொன்ன ராமு!

அதே சமயத்தில் "யாரடா அது? கிச்சுவாடா!" என்று சொல்லிக்கொண்டே கிச்சுவின் தகப்பனுர் காரிலிருந்து ஒரே தாவலாகக் கீழே இறங்கிக் கிச்சுவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

கிச்சுவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கிச்சு வெகு நேரம் ஆகியும் வராமற் போகவே, அவனுடைய தகப்பனுர் மாம்பலம் சென்றிருக்கிருர். அங்கே ராமசாமியை விசாரித்தார். ராமசாமி தாம் பணம் கொடுத்தனுப்பியதாகச் சொன்னுர். அதே சமயம் தாம்பரத்திலிருந்து ராமசாமியின் வீட்டுக்கு வந்த ஒருவர், "கிச்சுவை நான் பல்லாவரத்துக்கு அருகில் பார்த்தேனே. யாரோ இரண்டு பிள்ளைகளுடன் போய்க் கொண்டிருந்தான்" என்றுர். உடனே ராமசாமியின் காரில் கிச்சுவைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

ரங்குவும் ராமுவும் பலே திருடர்கள். கிச்சுவின் கையில் பத்து ரூபாய் நோட்டைப் பார்த்து விட்டார்கள். அதை எப்படியாவது தட்டிக்கொண்டு போய்விடவேண்டுமென்று 'பொன் வயல்' படலம் ஒன்றைக் கற்பித்து, அவனை அழைத்துச் சென்றுர்கள். ஒட்டலில் படுக்க வைத்துவிட்டு, முன்னே போகிறமாதிரி போக்குக் காட்டி, யாரோ திருடர்கள் அடித்துப் பிடுங்கிச் சென்று விட்ட மாதிரி நினைக்கச் செய்வதற்காக உபாயம் செய்தார்கள். ஆனல் தக்க சமயத்தில் கிச்சுவின் தகப்பனுரும் ராமசாமியும் காரில் வந்து சேர்ந்தார்கள்.

ராமுவைக் காரில் ஏற்றிக் கொண்டு வந்து, போலீஸில் ஒப்படைத்தார் ராமசாமி. ரங்குவும் பிறகு அகப்பட்டுக்கொண்டான்.

"இப்பொழுது சிறுவர்களையும் பெரியவர்களையும் ஏமாற்றுவதற்கு எத்தனையோ வழிகளைக் கையாள்கிருர்கள். அவர்கள் ஆசை வார்த்தைகளிலெல்லாம் நாம் மயங்காமல் நேராக வீடு வந்து சேர்ந்தால்தான் பிழைக்கலாம். அதுவும் திருவிழா, பண்டிகைகள் என்றுல் இதே தொழிலாகப் பலர் அலைந்துகொண்டிருப்பார்கள். காலம் ரொம்பக் கெட்டுப் போய் விட்டது" என்று கிச்சுவுக்கு உபதேசம் செய்தார் அவனுடைய தகப்பனுர்.

# புதுப் பையன்

## கே. சுந்தரேசன்

"டிக்...டிங்" என்று சிறிது நேரம் மணி அடித்து ஓய்ந்தது. பையன்கள் எல்லோரும் வகுப்புக்குள் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால் வாத்தியார் வரவில்லை.

ராமு என்பவன் எழுந்தான்: "மாணவத் தோழர்களே! இன்று நம் அரும் பெரும் ஆசிரியர் 'சாமா' அவர்கள் வராததால் நீங்கள் எல்லாரும் அமைதியாகப் பேசிக்கொண் டிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

"அமைதியாகப் பேசணும்டா!" என்றதும் சிரிப்பொலி எழுந்தது. "பாடத் தெரிந்தவர்கள் தயவு செய்து பாடினால் எல்லோரும் கேட்கிறோம்" என்றான் கிட்டு. "பாட்டும் வேண்டாம், டான்ஸும் வேண்டாம். அடுக்கு மொழிச் சொற்பொழிவு ஆற்றத் தெரிந்தால் போதும்" என்றான் பட்டு.

கோவிந்தன் சினிமா பிலிமை முக்கோணமாக மடித்துக் கீழே வைத்து, 'டடக்..டடக்' என்று அடித்துக்கொண்டே யிருந்தான். நடுவில் ஒரு பையனின் குரல் கம்பீரமாகக் கேட்டது. அவன் எழுந்து, "டேய்...டேய்! எலி வால் டோய். .பாதாமி டோய்.."என்று கத்தினான். எல்லோருடைய பார்வையும் ஒரு முகமாகத் திரும்பியது. ஒரு சிறுவன் கையில் பையுடன் வேர்க்க விறுவிறுக்க அவசரமாக உள்ளே நுழைந்தான். அவன் பெயர் தோத்தாத்திரி. தோத்து என்று வீட்டில் கூப்பிடுவார்கள். ஆனால் இன்று அவன் பள்ளிக்கூடத்துக்கு வந்து நுழைந்ததுமே வாண்டு மணி அவனது அழகான பின்னலையும், நெற்றியில் பூசிக்கொண் டிருக்கும் விபூதியையும் கண்டு, அவனுக்குப் பல பட்டப் பெயர்களைச் சூட்டினான். தோத்துவுக்கு வயது பன்னிரண்டுக்குமேல் இருக்காது. செக்கச் செவேலென்று சிவந்த மேனி. படிப்பிலே மகா சூரன். மூன்றாவது பாரம் வரையில் ஊரிலேயே படித்து விட்டான். நான்காவது பாரம் படிக்க மாமா வீட்டிற்கு வந்தான். ஹைஸ்கூலில் அவனுக்கு முதலில் இடம் கிடைத்தது. ஆனால் பள்ளிக்குச் செல்லும்போது வழியிலேயே, "நாய் வால்...எலி வால்.." என்றெல்லாம் பலர் கேலி செய்தனர். வாண்டு மணி வைத்த பெயர்கள்தான் அவை.

புதுப் பையனுக்கு இதெல்லாம் புதுமையாகத்தான் இருந்தது. வகுப்பிலா இவ்வளவு அமளி துமளி? பக்கத்திலிருந்த வாண்டு மணியைப் பார்த்து, "இப்பொழுது யார் வாத்தியார்?" என்று கேட்டான்.

"பொடி மட்டை சாமா ஸார்!"

"என்ன, என்ன? பொடி மட்டையா?"




"ஆமாம்..ஆமாம். அதோ, வர்றாரே ஒருவர், தலைப்பாகை கட்டிக்கொண்டு, அவர்தான் குச்சி மட்டை வேணுகோபாலாச்சாரி! கையில் எப்போது பார்த்தாலும் மட்டைக் கழி!" என்று சொல்லி முடிப்பதற்கும், ஹெட்மாஸ்டர் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது. வகுப்பிற்குள் நுழைந்ததும், "வகுப்பில் என்னடா பேச்சு! இப்பொழுது உங்களுக்கு யாரடா வாத்தியார்?" என்று சீறினார், தோத்துவைப் பார்த்து.

"பொடி மட்டை சாமாவாம் ஸார்!" என்றான் தோத்து.

அவ்வளவுதான்; ஹெட்மாஸ்டருக்கு வந்துவிட்டது கோபம்.

"அவ்வளவு திமிரா உனக்கு? என்டா!" என்று கையிலிருந்த பிரம்பை எடுத்து விளாசினார் அவர்.

"இல்லை ஸார்...இல்லை ஸார், இவன்தான்-இவன்தான்!" என்று துள்ளிக் குதித்தான் தோத்து.

ஹெட்மாஸ்டருக்குப் பிறகு தான் அவன் புதுப் பையன் என்று தெரிந்தது.

"வந்ததும் வராததுமாக உனக்கு இப்படியெல்லாம் யார் கற்றுக் கொடுத்தது?"

"இவன்தான் ஸார்..ர்..." அழுகை மீறியது.

"ஓஹோ, இரண்டு வருஷம் ஸர்விஸான இரட்டை வால் தடியனா? செய்வான், செய்வான். திருட்டுக் கழுதை!" என்று அவன் காதைப் பிடித்துத் திருகி, 'சுளீர்...சுளீர்..' என்று இரண்டு வைத்து வெளியே தள்ளினார்.

அடி வாங்கிய வாண்டு மணிக்கு அது ஒன்றும் பிரமாதமாகத்

தோன்றவில்லை. 'இன்று வந்த பயல், இவன் - நம்மை ஹெட்மாஸ்டரிடம் அல்லவா காட்டிக் கொடுத்துவிட்டான்!' என்ற கோபமே அதிகரித்தது.

வாண்டு மணி மகா போக்கிரி. படிப்புக்கும் அவனுக்கும் வெகு தூரம். பெரிய பணக்காரரின் ஒரே பிள்ளை. கர்வம் படைத்தவன். வாத்தியார்களைக் கேலி செய்வது தான் அவன் வேலை. வகுப்பில் எல்லாப் பையன்களுக்கும் அவனைக் கண்டால் குலை நடுக்கம்தான். பள்ளிக்கூடத்தில் அவனது ஆட்சி என்றே கூறலாம். 'ஆனால் இன்று வந்த இந்த வாண்டுப்பயல் நம்மைக் காட்டிக் கொடுப்பதா? முதலில் அவனை இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டே துரத்தவேண்டும்' என்று பொருமினான் அவன்.

மணி நல்ல அழகுடையவன் தான். ஆனால் அவன் குரங்குச் சேஷ்டைகள் அவன் அழகைக் குறைத்தன.

பரீட்சைகளில் அவன் வாங்கும் மார்க், பாஸ் செய்வது எல்லாம், அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பரீட்சை எழுதும் பையனைச் சார்ந்தது.

ஒவ்வொரு விநாடியும் தோத்துவின்மேல் அவனுக்கு இன்னது செய்வதென்று அறியாத ஆத்திரம். எவ்வளவோ நாட்கள் அவனை வழியில் மடக்கி உதைக்கத் திட்டமிட்டிருக்கிறான். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அரை வருஷப் பரீட்சைகளில் மணிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து எழுதினவன் தோத்துதான். ஆதலால் மணி காப்பியடிக்க முடியாமல் சுழிதான் வாங்கினான். வருடாந்தரப் பரீட்சையும் நெருங்கியது. பரீட்சைக்கு முதல் நாள் தான் வாண்டு மணி புஸ்தகத்தைப் பிரித்தான். மூன்றாவது வருஷமும் பெயிலாகிவிட்டால் எவ்வளவு அவமானம் என்ற வருத்தமும் அவன் மனத்தில் இருந்தது. கண்கள் புஸ்தகத்தில் பதிந்தன. ஆனால் மனம்—?

தோத்து மேலத் தெரு வழியாக வந்துகொண்டிருந்தான். எங்கிருந்தோ மணி ஓடி வந்து தோத்துவின் சட்டையைப் பிடித்துக் கொண்டான். அடுத்த கணம் மாறி மாறி அவன் கன்னத்தில் பல குத்துக்கள் விழுந்தன. "ஐயோ! என்னை விட்டுவிடடா, கோடிப் புண்ணியமுண்டு. டேய்... டேய்... மணி... மணி" என்று அலறினான் தோத்து.

"தெரிந்ததாடா நான் யார் என்று? பூனைவாலே! ஹெட்மாஸ்டரிடம் சொல்கிறாயா, ஹெட்மாஸ்டரிடம்? உன்னை அன்றே ஒழிக்கத்தான் பார்த்தேன். ஆனால் தவறிவிட்டது.. போ... போய்த் தொலை! பரீட்சை எழுதும் போது எனக்குக் காட்டிக்கொண்டே எழுது..தெரிந்ததா?" என்று சொல்லிவிட்டுப் போனான் மணி.

பரீட்சையில் தோத்துவும் பயந்து விடைத்தாளை இவனுக்குக் காட்டினான். பரீட்சையில் தோத்துவுக்கும் மணிக்கும் சமமான மார்க்குகள்.

"டேய், மணி! பரீட்சைக்குப் படிடா என்றால் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்குகிறாயே, சோம்பேறி!" என்ற

அப்பாவின் கம்பீரமான அதட்டல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் மணி. அப்பொழுதுதான் தான் கண்டதெல்லாம் வெறும் கனவு என்பது புரிந்தது. இதே போல் அவன் தினம் புஸ்தகத்தைத் திறந்தால் தோத்துவின் நினைவு வந்துவிடும். அவனைக் கெடுக்கத் திட்டம் போடுவதிலேயே மனம் அலையும்..

பரீட்சையன்று கையில் அட்டையுடன் மேலத் தெரு வழியாக வந்துகொண்டிருந்தான் தோத்து. அப்பொழுது நல்ல வெயில். ஒரு வீட்டின் முன்பு மூன்று வயதுக் குழந்தை மண்ணில் விளையாடிக் கொண்டிருந்தது. தூரத்தில் ஒரு கிழவர் குடை பிடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார். குடையைக் கண்டு மிரண்ட பசுங்காளை ஒன்று நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்தது. தெருவில் எல்லோரும் பயந்து ஒதுங்கிக்கொண்டனர். குழந்தையை நெருங்கிவிட்டது காளை. குழந்தை 'வீல்' என்று வீறிட்டு அழுதது. ஒரே விநாடி.






**பையன்:** ஏம்பா, கிராமவாசிக்கும் நகரவாசிக்கும் என்ன அப்பா, வித்தியாசம்?

**தந்தை:** இது தெரியாதா? கிராமவாசி கிராமத்தில் இருப்பான், நகரவாசி நகரத்தில் இருப்பான்!

—பி. எஸ். பரமசிவன், சைதை.

---

தோத்து தன் கையிலிருந்த அட்டையை வீசி எறிந்துவிட்டு, குழந்தையைத் தூக்க ஓடினான். ஆனால் அடுத்த விநாடி, "ஐயோ!" என்ற குரல். குழந்தை தப்பிவிட்டது. அந்தப் பொல்லாத காளை தோத்துவைத் தன் இரண்டு கொம்புகளால் முட்டித் தள்ளிவிட்டு ஓடியது. வயிற்றிலும் மண்டையிலும் ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. கூட்டம் கூடிவிட்டது. உடனே ஒருவர் அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்.

"பாவம்! என் குழந்தையைக் காக்கப் போய்த் தன் உயிருக்கே உலை வைத்துக்கொள்ள இருந்தானே! அவனைக் கோவிலில் வைத்துத்தான் கும்பிடவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தார் குழந்தையின் தகப்பனார். நன்றி தெரிவிக்கும் பொருட்டு அவருடைய மகனும் சென்றான். ஆஸ்பத்திரியில் கட்டுகள் போடப்பட்டுக் கிடந்தான் தோத்து. அவன் மாமா கவலையுடன் பக்கத்தில் நின்றிருந்தார். டாக்டர் அவரைப் பார்த்து, "ஒன்றுமில்லை! கவலைப்படாதீர்கள், ஸார்! விழுந்த அதிர்ச்சி. காயங்கள் ஒரு வாரத்தில் ஆறிவிடும் என்று சமாதானம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது, "இவன்தான் என் குழந்தையைக் காப்பாற்றினான்... டாக்டர்... டாக்டர்! இவனை ஸ்பெஷலாகக் கவனித்துக் கொள்ளுங்கள். எவ்வளவு செலவானாலும் நான் கொடுக்கிறேன்" என்று கூறிப் பரிதாபப்பட்டு அந்தச் சிறுவனை நோக்கினார். அவருடைய மகன், "தோத்து... நீயா...என் தங்கையைக் காப்பாற்றினாய்? என்னை மன்னித்துவிடு. உன் நல்ல குணம் தெரியாமல் உன்னை உதைக்கத் திட்டமிட்டேன். என் படிப்பையும் கெடுத்துக் கொண்டேன். என்னை மன்னிப்பாயா?" என்றான். அவனைக் கட்டிக்கொண்டு அழுதான். அவன்தான் மணி. எல்லோரும் தோத்துவைப் புகழ்ந்தனர். உபாத்தியாயர்கள் அவன் பரீட்சைக்கு வராவிட்டாலும் நல்ல மார்க்குகள் வாங்கக் கூடியவன் என்று 'பாஸ்' போட்டனர். கர்வம்கொண்ட மணியின் ரிஸல்ட் நமக்குத் தெரிந்ததுதானே!

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[இந்தப் பகுதியில் உங்கள் கேள்விகளுக்குப் பேராசிரியர் விஞ்ஞானம் பதில் சொல்ல வந்தாலும் வந்தார்; ஒரே சயன்ஸ் பாடக் கேள்விகளாகவே வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பெரும்பாலான கேள்விகளுக்குப் பாடப் புத்தகத்திலேயே பதில் கிடைக்குமே என்கிறார் விஞ்ஞானம். அதனால் உங்களைச் சுற்றியுள்ளவற்றைப் பாருங்கள்; இயற்கையையும் செயற்கையையும் கவனியுங்கள். எது உங்களுக்கு உண்மையில் புரியவில்லையோ, எதற்கு உங்களுக்குச் சரியான விடை கிடைக்கவில்லையோ, அந்த மாதிரிக் கேள்விகளாகக் கேளுங்கள். அதனால் எல்லாருக்குமே நன்மையுண்டு. ஆ—ர்.]

**சே. சுப்பையா, வளையப்பட்டி.**

மனிதன் உடம்பில் நகம், தலைமயிர், மேல்தோல் இவைகளில் ரத்த ஓட்டம் நடைபெறாததற்குக் காரணம் என்ன?

நகம், தலைமயிர், மேல் தோல் ஆகியவை மூன்றும் மனிதத் தோலின் மாறுபாடுகள் எனலாம்.

**மேல் தோல்:** இது பல அடுக்குக்களால் அமைந்தது. இதன் மேலடுக்கு அழுத்தமானது. இது உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய இடங்களில் தடித்து உறுதியாக இருக்கிறது. இதற்கு அடியிலுள்ள பகுதியில் ரத்த ஓட்டம் நடந்து வருகிறது. மேல் பகுதி தேயத் தேய, அடியிலிருந்து புதிய அமைப்பு மேலே வந்துகொண்டேயிருப்பதால், மேல் பகுதிக்கு ரத்த ஓட்டம் அவசியம் இல்லை.

**நகங்கள்:** இவைகளும் மேல் தோலின் மாறுபாடுகள்தான். நகங்களின் அடிப் பகுதியை அடுத்துள்ள இடத்தில் அவை வளர்வதற்கு வேண்டிய ரத்த ஓட்டம் இருந்து வருகிறது, மரங்களின் வேர்ப்புறம் நீர் இருப்பதுபோல.

**தலைமயிர்:** தலைமயிரும் மேல் தோலிலிருந்து தோன்றும் வளர்ச்சியே. மயிரின் வேர்ப்புறத்தில் ரத்த ஓட்டம் இருப்பதால், அங்கே அது மயிரை வளர்த்து மேன்மேலும் வெளியே தள்ளிக் கொண்டு வருகிறது. ஆகையால், வெளிப்புறத்தில் உள்ள மயிருக்கும் ரத்த ஓட்டம் அவசியமில்லை.

**ஆர். சேகர், திருமங்கலம்.**

எனக்குக் கையில் பலம் இல்லை; பலம் ஏற்பட என்ன வழி?

நரம்பின் பலவீனத்தால் பலக் குறைவு உண்டாகலாம். இந்த விஷயத்தை அறிந்த தக்க நிபுணர்களின் துணையைத் தேடி, வைத்தியம் செய்துகொள்ள வேண்டும். அல்லது, அது தசையின் பலவீனத்தால் இருந்தால் படிப்படியாக உடற்பயிற்சி செய்து, கைக்குப் பலத்தை உண்டாக்கலாம். எதிலும் அவசரம் கூடாது.

அல்லது மூன்றாவதாக, வைட்டமின் B குறைந்தாலும் பலவீனம் ஏற்படலாம். அப்படியானால், அந்தக் குறைவைத் தக்க மருந்தோ, மாத்திரையோ சாப்பிட்டு, தீர்த்து விடலாம். எதற்கும் தக்க டாக்டரை நேரில் கலந்து, அவர் சொல்வதைப்போல் நடந்து கொள்ள வேண்டும்.

**கே. சதாசிவன், மதுரை.**

**நாம்** பார்த்துக்கொண்டே போனால், நிலாவும் நம் கூடவே வருகிறதே, ஏன்?

இதை விளக்குவதற்கு ஒரு படம் போட்டுக் காட்டியிருக்கிறேன். படத்தில் ஒ என்பது ஒளிவீசும் பொருளைக் குறிக்கும். அ ஆ, இ ஈ, உ ஊ என்பவை சம தூரத்திலுள்ள இடங்கள்.




அ ஆ என்னும் தூரம் இ ஈ என்னும் தூரத்திற்குச் சமம். ஆயினும், அ ஒ ஆ என்னும் கோணமானது இ ஒ ஈ என்னும் கோணத்தை விடப் பெரியது.

அ - விலிருந்து ஆ - விற்கு நடந்து சென்றால், ஒளிக் கிரணத்தின் திசையானது ஒ - அ என்னும் திசையிலிருந்து ஒ ஆ என்னும் திசையாக மாறுகிறது. இந்தத் திசை மாற்றமே அ ஒ ஆ என்னும் கோணம்,

இ - யிலிருந்து ஈ - க்கு நடந்து சென்றால், ஒளிக்கிரணத்தின் திசை ஒ இ - யிலிருந்து ஒ ஈ - யாக மாறுகிறது. இந்தத் திசை மாற்றமே இ ஒ ஈ என்னும் கோணம். இது அ ஒ ஆ என்னும் கோணத்தை விடச் சிறியது.

ஒ - என்பது உன்னிடமிருந்து வெகு தூரத்துக்கப்பால் இருந்து, உ - விலிருந்து ஊ - வுக்குப் போனால் ஒளிக் கிரணத்தின் திசை மிக மிகச் சிறிய அளவிலேயே மாறும். ஆனால் நம்மால் இவ்வளவு சிறிய திசை மாறுபாட்டை உணர முடியாது. ஆகவே, கிரணங்கள் ஒரு போக்காகவே வருவதாகத் தோன்றும். ஆகையால் உ - விலிருந்து பார்த்தாலும், ஊ - விலிருந்து பார்த்தாலும், ஒ என்பது ஒரே திசையில் இருப்பதாகவே தோன்றும்.

ஒ - என்பது சந்திரன் என்றும், உ, ஊ என்பவை நாம் சாதாரணமாக நடந்து செல்லக் கூடிய இரண்டு இடங்கள் என்றும் வைத்துக் கொள்வோம். பூமியிலிருந்து சந்திரன் வெகு தூரத்துக்கு அப்பால் இருப்பதால், அது உ - விலிருந்து பார்த்தாலும் ஊ - விலிருந்து பார்த்தாலும் ஒரே திசையில் இருப்பதாகவே தோன்றுகிறது.

நீ ஒரு சிநேகிதனோடு பேசிக்கொண்டே நடந்து செல்லும் போது, அவன் உன் பக்கத்தில் வலது புறமாகவே இருக்கிறான் என்று வைத்துக்கொண்டால், அவன் உன்னோடுகூட நடந்து வருகிறான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், சந்திரன் இடம் மாறுவதில்லை. ஆனாலும் அது ஒரே திசையில் இருப்பதாகவே தோன்றுவதால், அதுவும் உன்னோடு வருவதுபோல் உனக்குத் தோன்றுகிறது.

கதை: ஆர்வி

# தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி




அதோ! என் அருமைத் தங்கப்பறவை!
பாலகனுடைய சகோதரன்! அவனே தங்கப்பறவையாக இருக்கிறன்.
பாலகனு? அது யார் அது பாலகன்?
இதுவா? உயிருள்ள மனிதனுடைய சிலையா இது?
ஆமாம்! உயிருள்ள மனிதன் தான்!
முகம் ரொம்ப அழகாயிருக்கிறது! இனிமேல் இந்தச் சிலைக்கு உயிரு வராதோ?
அவசரப்படாதே! முயன்றால் முடியாமல் போகுமா? கண்ணாடியைப் பார்! தெரியும்.
ஐயோ! பார்க்கும் போதே உருவம் மாறி வருகிறதே! புரியவில்லையே!
ஹஹ்ஹா, பொறு; பயப்படாமல் இரு
ஹா!
உன்னைத் தூக்கிப் போகச் செய்த மந்திரவாதி இவன் தான்!
தொடரும்.




அமலன் மிக மிகச் சாமர்த்தியமாகக் குதித்தான். இல்லாவிட்டால் சரியான அடிபட்டுப் பொறிகலங்கியிருக்கும். விழுந்த அதிர்ச்சியில் சிறிது நேரம் எழுந்திருக்க முடியாமல் இருந்ததே தவிர வேறு ஒன்றும் நேரவில்லை.

நட்ட நடு நிசியானதால் எங்கும் அமைதியே சூழ்ந்திருந்தது. அரண்மனைச் சிப்பந்திகள் யாரும் இருப்பதாகவே தெரியவில்லை. எனவே அமலன் எழுந்து முதல் வேலையாகக் கதவை உட்புறமாகத் தாளிட்டான்.

அது பொக்கிஷ சாலையின் முன் கூடம் போலிருந்தது. விடிய விடிய எரியும்படி கண்ணாடி வஸ்தர் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. நடுவிலிருந்த பேழை பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அந்தப் பேழையின் சாவி எங்கே என்று தேடவேண்டிய அவசியமே இல்லாமல் அதன் வாயிலேயே காணப்பட்டது.

அமலனுக்கு இது வரையில் பட்ட பாடெல்லாம் பெரிதாகவே தோன்றவில்லை. மனசு உள்ளுக்குள்ளாகவே துள்ளிக்கொண்டிருந்தது. ஆயினும் மற்றொருபுறம் 'திக் திக்'கென்று அடித்துக்கொண்டது. அவன் அந்தச் சாவியை ஒரு முறை சுழற்றித் திருப்பித் திறந்தான். பெட்டி திறந்து கொண்டு விட்டது.

ஆகா, பெட்டியின் உட்புறம் தகதகவென்று கண்களைக் கூச வைக்கிறதே! ஸ்வர்ணமயமான மெல்லிய தகடு அடிக்கப்பட்டிருந்தது. நடுவில் பட்டுத்துணி சுற்றிய ஒரு சிறு பழுக்காய்ப் பெட்டி. அமலன் துணியை அவிழ்த்து, மூடியைத் திறந்தான். அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. ஏதோ சொப்பனம் காண்கிறோமோ என்றுகூட அவநம்பிக்கையாக இருந்தது. சந்திரவர்மனுடைய செப்பு முறியின் இரண்டாவது பாகம் அதனுள்ளே

இருந்தது. இவ்வளவு சிரமத்துக்குப் பிறகு, அதைக் கையில் எடுத்த போது அவனுக்கு எங்கேயோ வானில் எழும்பிப் பறப்பதுபோல் இருந்தது. உலகத்து அதிசயங்களையெல்லாம் ஒரே சமயத்தில் பார்ப்பதுபோல இருந்தது. சூரிய சந்திரர்களை எட்டிப் பிடித்துவிட்டது போலவும் இருந்தது. அவன் தன் இடையில் பத்திரமாக வைத்து இதுவரையில் காப்பாற்றி வந்த புலிக்கோட்டை மூடியையும் வெளியே எடுத்து, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தான். சந்தேகமில்லை! சந்திரகிரிக் கோட்டையும் இந்த மதியும் இனி அமலனுக்குத்தான் சொந்தம். இந்த இரு போட்டிகளிலும் தோல்வியடைந்த விமலனா, இனி வரப்போகும் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெறப்போகிறான்? ஒருகாலும் இல்லை!

“அதிருஷ்ட தேவதை என் பங்கில் தான் இருப்பதாகத் தெரிகிறது!” என்று உள்ளம் குதி போட, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். எந்த வழியாகச் செல்வது, எங்கே சிம்மராஜாவைப் பார்ப்பது என்பது ஒன்றும் தெரியவில்லை. எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. இவ்விதம் சிறிது நேரம் அவன் தயங்கி நிற்கும்போது, மூன்று புறமிருந்து மூன்று வாள் வீரர்கள் திடீரெனத் தோன்றினர். இவ்வளவு நேரம் அவர்கள் எங்கே பதுங்கியிருந்தார்களோ? எதற்காகப் பதுங்கியிருந்தார்களோ, தெரியவில்லை. அவர்களுடைய தோற்றத்தையும், அவர்கள் கையிலிருந்த உருவிய வாட்களையும் பார்த்த அமலனுக்கு விபரீதமான நினைவு தோன்றியது. அவனை அறியாமல் அவனை கைகள்



இடையிலிருந்த வாளை உருவியது.

கண் மூடிக் கண் திறக்கும் நொடிக்குள் அமலன் மூவரையும் ஒரே மூச்சில் எதிர்க்கத் தயாராகிவிட்டான். இருளில் மின்னல் நெளிவதுபோல அந்த நாலு பேருடைய பட்டாக்கத்திகளும் பளிச்சுப் பளிச்சென்று மின்னின.

“ஜாக்கிரதை! ஓர் அடி முன்னால் வைத்து என்னை நெருங்கினீர்களோ, தொலைந்தீர்கள்!” என்று அமலன் சிம்மம்போல் கர்ஜனை புரிந்தான். தலையே போனாலும சரிதான்; தன்னிடமுள்ள முறிகளைத் தவற விட்டுவிடுவானா?

மூவரும் இடி இடிப்பதுபோல் சிரித்தார்கள். அமலன் அந்தச் சிரிப்பில் மிரண்டுபோய் நின்றான். அந்தச் சிரிப்பொலி அவனுக்குப் பழக்கமானதுபோல் இருந்தது.

“இளவரசே! பொறுங்கள்!” என்று கூறிச் சிரித்தது ஒரு குரல்.

“உங்கள் வெற்றியைப் பாராட்ட வந்திருக்கிறோம். எங்களையே வெட்டி வீழ்த்திவிடுவீர்கள் போலிருக்கிறதே!” என்றது மற்றொரு குரல்.



சந்தேகமேயில்லை! ஒன்று சிம்ம ராஜாவின் குரல்தான். மற்றொன்று, தம்பி ராஜாவினுடையது. அதற்குப் பிரகு தான் அவனுக்கு அதிர்ச்சி அடங்கிற்று.

மூன்றாவதாக நின்றவன் இரு கைகளாலும் மும்முறை ஓங்கி ஓங்கித் தட்டினான். அந்தச் சத்தம் இரவு வேளையாகையால் வெகுதூரம் கேட்கும்படி ஒலித்தது. சற்றைக்கெல்லாம் பந்தம் ஏந்திய பணியாட்கள் பலர் நாலு புறங்களிலிருந்தும் அங்கே கூடினார்கள். அமலனுக்குத் தன் அவசர புத்தியைக் கண்டு சிறிது அவமானமாகக்கூட இருந்தது. கையைத் தட்டியவன் அரசரின் மெய்காவலன்தான் என்பது வெளிச்சத்தில் தெரிந்தது.

மூவரும் அமலனுடைய அசகாய சூரத்தனத்தை வானளாவப் புகழ்ந்து, பாராட்டினார்கள். அந்

தப் புகழுரைகளைக் கேட்கவே அமலனுக்குப் பிடிக்கவில்லை. "விமலன் எங்கே, அவன் என்ன ஆனான்?" - இதுவே அவன் கேட்ட முதல் கேள்வி. ஆனால் அவர்கள் ஒருவருக்கும் அவனைப் பற்றி ஒன்றும் கூற முடியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயமாக அமலனுக்கே தெரியும். இந்தத் தோல்வியை விமலனால் தாங்கவே முடியாது. அதன் பிறகு நடந்தவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக விவரிக்கவே வேண்டியதில்லை. இதுவரையில் அமலனையே பின்பற்றி வந்த நமக்கு விமலன் என்னவானான் என்பதை அறிய ஆவல் உண்டாவது சகஜம். ஆகவே நாமும் சிம்மராஜாவுடனும் மற்ற மூவருடனும் சேர்ந்து போவோம். அந்த மர்ம மாளிகையில் பார்க்கவேண்டிய இடம் என்று எதுவும் பாக்கி வைக்காமல் பார்த்து விட்டார்கள். விமலனை எந்த இடத்திலும் காணோம்! ஆனால் என்ன ஆச்சரியம்! ஊமையன் அமலனை உபசரித்த அந்த மண்டபத்தில், ஒரு சயன மஞ்சத்தில் பூலோகமோ கைலாசமோ என்று விமலன் படுத்துச் சுக நித்திரை புரிந்து கொண்டிருந்தான். முறியைத் தேடி எடுக்க வேண்டுமே என்ற கவலையே சிறிதும் அவன் பட்டதாகத் தெரியவில்லை.

சிம்மராஜா அவனைத் தட்டி எழுப்பி, "இளவரசே! எழுந்திருங்கள்!" என்றார்.

விமலன் மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே அமலனும் மற்ற மூவரும் நிற்பதைப் பார்த்து, எழுந்து உட்கார்ந்து கண்களை அலட்சியமாகக் கசக்கிக் கொண்டான்.

"என்ன விஷயம் ஒரே கூட்டமாக வந்திருக்கிறீர்களே!"

"முறியை அமலாதித்தர் எடுத்து விட்டார்!" என்றார் சிம்மராஜா.

"அப்படியா? எடுத்துவிட்டால் சரிதான்!" என்று சொல்லிக் கொட்டாவி விட்டு, விமலன் வேறு பக்கமாகத் திரும்பிப் படுக்கப் போனான்.

தூக்கக் கலக்கமா, அல்லது உண்மையிலேயே அலட்சியமா என்பது புரியாமல் எல்லோரும் திகைத்தனர். இந்தத் தோல்வியை ஏற்க முடியாமல் விமலன் மனம் உடைந்துபோவான் என்று பயந்துகொண்டிருந்த அமலனுக்குக்கூட இது பெருத்த ஏமாற்றமாக இருந்தது. முறியை ஒளித்து வைப்பதும், அதைப் பிறகு அமலன் எடுத்துவிட்டான் என்று சொல்வதும் அத்தனையும் ஒரு நாடகம், ஏமாற்று வித்தை என்பது போலவே விமலன் எண்ணியிருக்க வேண்டும்.

"விளையாட்டு இல்லை, இளவரசே! மிகவும் பிரயாசைப்பட்டு, உயிரையே வெறுத்து அவர் இந்த வெற்றி பெற்றிருக்கிறார்!" என்றார் சிம்மராஜா மீண்டும்.

விமலன் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "இருக்கும், இருக்கும். மற்றவைகளைக் காலையில் பார்த்துக் கொள்ளலாமே—" என்று முகத்தில் அடித்ததுபோல் பேசினான்.

உண்மையில் இந்தப் போட்டியை அவன் ஒரு போட்டியாகவே கருதவில்லை என்று காட்டியது அவன் பேச்சு. அதற்குமேல் அங்கே நிற்பது உசிதமில்லை என்று




சிம்மராஜா முதலானோர் திரும்பிச் சென்றார்கள்.

* * *

பொழுது புலர்ந்தது. சிம்மராஜாவும் தம்பி ராஜாவும் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய மரியாதை உபசரிப்புக்களில் இம்மியளவும் குறை நேராமல் பார்த்துக் கொண்டார்கள். பார்க்கப் போனால் அமலனைவிட விமலனுக்குத்தான் உபசரிப்பு அதிகமாக இருந்தது என்று சொல்லவேண்டும். ஆயினும் விமலன் என்னவோ அவர்கள் காட்டிய அதிகப்படியான மரியாதையைக் கண்டு அதிகமாகவே சந்தேகப்பட்டான்.

சிம்மராஜா மிகவும் பரிவுடனேயே அவர்களைப் பெரிய கோட்டைக்கு வழியனுப்பி வைத்தார். வழக்கம் போல ஒரு சிறு குதிரைப் படையையும் அவர்களுடைய பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தார்.

சகோதரர்கள் இருவரும் வாயுவேகம் மனோவேகமாகக் குதிரைகளைச் செலுத்தினார்கள். கூட வந்த படையினரால் அவர்களைப் பின்பற்றிச் செல்லவே முடியவில்லை. திடீரென்று இரண்டு சகோதரர்களும் இப்படி முன்னதாகச் செல்லும் காரணம் புரியாமல் குதிரைப்படைத் தலைவன் கவலை கொண்டான். தன்னுடைய குதிரையையும் அந்த வேகத்துடன் செல்லும்படி முடுக்கி விட்டான். (தொடரும்)

## மல்கோவா மாம்பழம்

*1 - 11 - 54* இதழை மல்கோவா மாம்பழம் என்றுதான் சொல்ல வேண்டும். அட்டைப் படத்தில் அண்ணனும் தங்கையும் சைக்கிளில் செல்வது பார்க்கப் பரவசமளிக்கிறது. 'கேட்டீர்களா!' பகுதி நன்ருயிருப்பதுமல்லாமல், குருடனுக்குக் கைத் தடி உதவுவது போல், செய்திகள் அறியாத எங்களுக்கு உதவியாயிருக்கிறது. டாவி வரைந்த ஹாஸ்யத் துணுக்கு வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறது. 'லீடர் மணியும்' 'சந்திரகிரிக் கோட்டை'யும் தீபாவளி மலரில் வந்துவிட்டது என்று அறிந்ததும் எங்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது! காரியாலயத்திற்கு வந்து கேட்கலாமென்றுகூடத் தோன்றியது! ஆனல் 1-11-54 இதழில் அதே இரு தொடர்களும் பிரசுரமாகியிருப்பதைக் கண்டு நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லே இல்லே. இந்த இதழில் 'தூங்கும் அழகி' சித்திரத் தொடர் கதை பிரமாதமாயிருக்கிறது. வள்ளியப்பா எழுதிய 'சிறிய வீடு' என்ற பாட்டு படிக்கப் பரவச மூட்டுகிறது.

பேராசிரியர் விஞ்ஞானம் சிக்கல்களைத் தகர்த்தெறிகிருர்.

கதிரவன் என்ற கதை தமாஷாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. தொடர்ந்து வந்தால் நன்ருயிருக்கும். காமிரா நஷ்டம் என்ற துணுக்கு ஏ-ஒன்!

'மூன்று ஆடுகள்' என்ற கதை பிரமாதம். ஆயிரம் வீரர்கள் கதை எங்களுக்குத் திருப்திகரமாக இருக்கிறது. விஷ்ணு எழுதிய துணுக்குக்கு ஷொட்டுக் கொடுக்க

### முதல் எழுத்து மாறியது!



வேண்டும். எங்கள் பகுதியில் 'தாண்டவக் கோனே' என்ற பாட்டுக்கு ஒரு ஜே போட வேண்டும். மொத்தத்தில் எங்களுக்குக் கண்ணன் மல்கோவா மாம்பழம்.

பூங்காவனம், சூளை, சென்னை-7.

## பாடுவோம்

**கேட்டீர்களா:** தேர்ந்தெடுத்த முக்கியமான செய்திகளை, சிறுவர்கள் அறிய வேண்டிய செய்திகளைத் தருகின்ற 'குட்டி நியூஸ் பேப்பர்'!

**லீடர் மணி:** அத்தை வீட்டில் வந்து அவதிப்படும் சிறுவனின் பரிதாபக் கதையை நேரில் நிகழ்வது போல் - திரையில் பார்ப்பது போல் - எழுதியிருக்கிறார் 'ஆர்வி.'

**தூங்கும் அழகி:** 'ஸாமியின் சித்திரத்தால் ஆர்வியின் கதை சோபிக்கிறதா, அல்லது ஆர்வியின் கதையால் ஸாமியின் படம் சோபிக்கிறதா?' என்பது விடுவிக்க இயலாத ஒரு புதிர்!

**சிறிய வீடு:** கிரேக்க ஞானி சோக்ரதரின் வார்த்தையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அமுதமான கவிதை! சரளமான வரிகள்!

**கேளுங்கள், சொல்கிறேன்:** ஒரு பொது அறிவுக் குவியல். இதில் காணப் பெறாத விஞ்ஞான விஷயமும், விளங்கப் பெறாத விஞ்ஞானமும் எதுவுமே இருக்க முடியாது!

**துப்புத் துலங்கியது:** இன்ஸ்பெக்டர் ஒன்று நினைக்க, டாக்டர் வேறொன்று சொல்கிறார்! கதை சுமாராக இருக்கிறது. விஷயமும் இருக்கிறது.

**மூன்று ஆடுகள்:** கண்ணனுக்கேற்ற கதையல்ல. முடிவை இன்னும் மாற்றியிருக்கும் பட்சத்தில் 'இது ஒரு கதை' என்றாவது தோன்றச் செய்திருக்கும்!

**சிறந்த நட்பு:** புறநானூற்றுப் பாடலுக்கு அழகான, தெளிவான விளக்கவுரை!

**ஆயிரம் வீரர்கள்:** சாதாரணமான கதை, ஆனால் அர்த்தம் பொதிந்த கதை! தோழனின் அவமதிப்பைத் தன் அறிவினால் போக்கிக் கொண்டான். அதே அறிவினால் 'ஸ்காலர் ஷிப்'பும் பெற்றான்.

**சந்திரகிரிக் கோட்டை:** கதையை வர்ணனை மிஞ்சுகிறது. வர்ணனையுடன் அழகிய நடை போட்டி யிடுகிறது! இந்தப் போட்டியில் எழுந்தது, ரசனை மிகுந்த கதை.

**கதிரவன் எங்கே:** பழைய கதை; புதிய மெருகு; நுண்ணறிவின் எடுத்துக் காட்டு!

**எங்கள் பகுதி:** விமரிசனத் துறையில் முன்னேற்றம் காண அமைக்கப்பட்ட சிறந்த பகுதி! இப்படிப்பட்ட 'கண்ணனை'—

சிறுவருக்குச் சேவை செய்யச்
சிங்காரக்
'கண்ணன்' நாட்டில்
வந்தானையா!'

என்று தாராளமாக நான் பாடுவேன்! தவறு, நாம் பாடுவோம்!

--எஸ். விசுவநாதன், சேலம் டவுன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
21014
சென்னை-600 008

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

மேலூர்
மதுரை ஜில்லா

உபதலைவர்: எம். மீரா மொகைதீன்
செயலாளர்கள்: இ. கோதண்டராமன்
என். கோதண்டராமன்
பொருளாளர்: என். பாலவாசுதேவன்

பதினைந்து பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு க்ளப் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேவங்கை
இலங்கை

உபதலைவர்: பி. பி. சுந்தரராஜா
செயலாளர்: பி. சுப்பிரமணியன்
பொருளாளர்: பி. மாரிமுத்து

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. 'ராஜன்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

வலங்கைமான்

உபதலைவர்: ஜி. சிவசுப்பிரமணியன்
செயலாளர்: எஸ். கனகராஜன்
பொருளாளர்: ஏ. தாஜுதீன்

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது.

பவானியில் கிளைக் கழகம் ஸ்தாபிக்க, 11-12-54 இல் சனிக்கிழமை பகல் 2½ மணிக்கு, 5/14 கடைவீதி என்ற விலாசத்தில் ஆர். எஸ். மணி (M. 381) யை மற்ற அங்கத்தினர்கள் சந்திக்க வேண்டுகிறோம்.

## பேனா நண்பர்கள்

1. எம். மீரா மொகைதீன், கண்ணன் கிளைக் கழகம், மேலூர், மதுரை ஜில்லா.
2. B. P. சுந்தரராஜா, 42. வேவங்கே, கண்டி, இலங்கை.
3. G. சிவசுப்பிரமணியன், கண்ணன் கிளைக் கழகம், போர்டு உயர்நிலைப்பள்ளி, வலங்கைமான் போஸ்டு, தஞ்சை ஜில்லா.
4. R. S. மணி, 5/14, கடைவீதி, பவானி.
5. பழ. மெய்யப்பன், c/o பழ. மெ. இல்லம், பூலாங்குறிச்சி, ராமநாதபுரம் ஜில்லா.
6. V. சீதாராமன், 13, எல்லையம்மன் கீழ வீதி, விஜயபுரம், திருவாரூர்.
7. மணிவண்ணன், 13, மராட்டியத் தெரு, பட்டுக்கோட்டை.
8. S. P. சங்கர், 5-ம் படிவம். c. எஸ். எல். பி. உயர்நிலைப் பள்ளி, நாகர்கோயில்.
9. H. S. ஸ்ரீநிவாஸன், விஷ்ணுபுரம் போஸ்டு, தஞ்சை ஜில்லா.
10. S. V. கண்ணன், 216. கே. கே. எஸ். ரோடு, இலங்கை.
11. A. ராமையா, 9/13 சிரியன் சர்ச் 2-ஆவது ரோடு, கோவை.
12. K. M. சுந்தரம், பெரியகடைத் தெரு, கல்லல், ராமநாதபுரம் ஜில்லா.

Reg. No. M. 5542



# உங்களை மறவாத உள்ளம் ஒன்று!

ஆங்கிலப் புது வருஷத்துடன்
பொங்கல் திருநாள் வருகிறது!
உங்கள் அருமைக் குழந்தைகளுக்கு
அன்புப் பரிசு தரவேண்டாமா?
மாமா தன் மருமக்களுக்குப் பரிசு தர
லாம்; அப்பா தம் நண்பர்கள் குழந்தைகளுக்
குப் பரிசு தரலாம்.
நாலே ரூபாயில் இதோ ஒரு சிறந்த பொங்கல்
பரிசு! கண்ணன் தீபாவளி மலர் உள்பட வருஷ
சந்தா ரூபாய் நாலுதான். இந்தப் பணத்தை
அவர்கள் பெயரில் சந்தா கட்டுவதே அந்தப்
பரிசு. கண்ணைப் பறிக்கும் 24 இதழ்களும் தீபா
வளி மலரும் உங்கள் வாழ்த்துடன் அவர்களைத்
தேடிச் செல்லும்.
கண்ணனை விரும்பாத குழந்தைகள் ஏது?
குழந்தைகளின் அபிமானப் பத்திரிகை; அறிஞர்
கள் பாராட்டும் பத்திரிகை.
புனித நாளில் ஒரு புனிதமான காரியம்!



என் பொங்கல் பரிசாகக் கண்ணனை
ஒரு வருஷம் அனுப்புங்கள்

(1) பெயர் ...........................

விலாசம் ...........................

...........................

(2) பெயர் ...........................

விலாசம் ...........................

...........................

இந்தப் பரிசு அனுப்புபவர்:

பெயர் ...........................

விலாசம் ...........................

...........................

மேற்கண்ட சந்தாவுக்காக ரூ. ......
மணியார்டர்/செக் மூலம் வருகிறது.